# மடு அன்னை பிள்ளைத் தமிழ்

மு.சிங்கராயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடு அன்னை பிள்ளைத் தமிழ்

மு. சிங்கராயர்

வெளியீடு:
"தமிழ்மதி"
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பின் தரவுகள்


| | | |
|---|---|---|
| நூலின் மகுடம் | : | மடு அன்னை பிள்ளைத் தமிழ் |
| ஆக்கம் | : | மு. சிங்கராயர் |
| பதிப்பு | : | ஆவணி 2004 |
| பக்கம் | : | XXVI + 54 |
| நூலின் அளவு | : | $\frac{1}{8}$ டெமி |
| பிரதிகள் | : | 300 |
| வெளியீட்டாளர் | : | "தமிழ்மதி"<br>955/9, கடற்கரை வீதி,<br>யாழ்ப்பாணம்,<br>இலங்கை. |
| அச்சுப்பதிப்பு | : | புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்,<br>யாழ்ப்பாணம். |
| முகப்போவியம் | : | ரமணி |
| முகப்போவியப் பதிப்பு | : | குரு பதிப்பகம்,<br>திருநெல்வேலி,<br>யாழ்ப்பாணம். |
| பதிப்புரிமை | : | திலீபா அலெக்ஸ் ஜோண்சன் |
| விலை | : | ரூபா **100/-** |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PUBLICATION DATA


| | | |
|---|---|---|
| TITLE | : | MADU ANNAI PILLAI THAMIL |
| AUTHOR | : | M. SINGARAYAR |
| DATE OF PUBLICATION | : | AUGUST 2004 |
| PAGES | : | XXVI + 54 |
| SIZE | : | $\frac{1}{8}$ DEMY |
| COPIES | : | 300 |
| PUBLISHERS | : | "THAMIL MATHY"<br>955/9, BEACH ROAD,<br>JAFFNA,<br>SRI LANKA. |
| PRINTERS | : | ST. JOSEPH'S CATHOLIC PRESS,<br>JAFFNA. |
| COVER DESIGN | : | RAMANI |
| COVER PRINT | : | GURU PRINTERS,<br>THIRUNELVELY,<br>JAFFNA. |
| COPY RIGHT | : | THILEEBA ALEX JOHNSON |
| PRICE | : | Rs. **100/-** |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| ஆசியுரை | V |
| சிறப்புப்பாயிரம் | VII |
| வாழ்த்துரை | XII |
| விதந்துரை | XIV |
| நயப்புரை | XVIII |
| எண்ணத்தறி ஓடும்போது.....! | XIX |
| வல்லவனே! யேசுநாதா! | XXIII |
| தமிழெனக்குத் தருவாய் அம்மா! | XXIV |
| உலகாண்ட தமிழே! | XXV |
| அவையடக்கம் | XXVI |
| காப்புப் பருவம் | 1 |
| செங்கீரைப் பருவம் | 7 |
| தாலப் பருவம் | 13 |
| சப்பாணிப் பருவம் | 18 |
| முத்தப் பருவம் | 23 |
| வருகைப் பருவம் | 28 |
| அம்புலிப் பருவம் | 33 |
| அம்மானைப் பருவம் | 39 |
| நீராடற் பருவம் | 44 |
| ஊசற் பருவம் | 49 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் ஆயர்

## மேதகு பேரருட்கலாநிதி இராயப்பு யோசப்

ஆண்டகை அவர்களின்

# ஆசியுரை

சிலுவையில் உயர்த்தப்பட்டபோது கிறிஸ்து அனைத்தையுமே தம்மிடம் ஈர்த்துக்கொண்டார். இது மீட்பின் வரலாறு தரும் செய்தி. புவி வாழ்வில் எல்லாமே உயர்ந்த பேறடைய வேண்டு மென்பதே இறைசித்தம். இத்தகைய பேற்றுக்கு அரண் செய்யக்கூடிய விழுமியங்களை எடுத்துச் சொல்லவே ஒவ்வொரு மனிதனும் திருமுழுக்கின் வழியாக இறையேசுவால் அழைக்கப் பட்டுள்ளான்.

சரித்திர நகர்வுகளின் பின்னணியில் சிந்திக்கும்போது மக்களின் இருப்புக்கும், விடுதலைத் தேடலுக்கும், வாழ்வியலுக்கும் உந்துசக்தியாகவே படைப்பிலக்கியங்கள் பல தோற்றம் பெற்றுள்ளதனை அறியலாம். மனிதத்தின் உண்மையான முகத்தை இவைகளில் நாம் தரிசிக்கவும் முடிகின்றது.

காலவெள்ளம் புரண்டோடிப் போனாலும் சவால்களுக்கு முகங்கொடுத்து, மனித வாழ்வை ஆற்றுப்படுத்தும் தம் இலட்சிய வேட்கையில் அவை என்றுமே பின்னடைவு கண்டதில்லை.

அத்தகைய படைப்புக்கள்தான் அழியாப் புகழோடு இன்றளவும் நின்று நிலைக்கின்றன.

ஆரோக்கியமானதும், அர்ப்பணிப்பு மிக்கதுமான சமாதானச் சூழல் ஈழத்திருநாட்டில் மலர உழைப்பதுவே இன்றைய எழுத்தாளர் களிடம் காலம் எதிர்பார்க்கும் பெரும்பணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழியிலுள்ள பிரபந்த வகைகளுள், "பிள்ளைத்தமிழ்" ஒன்று. இந்தத் திசையில் தளையவிழ்ந்திருக்கும் "மடுஅன்னை பிள்ளைத்தமிழ்" என்ற இந்நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் நான் மகிழ்வடைகிறேன். திரு. மு. சிங்கராயர் அவர்களின் கவிதை வரிகளிலே பொருளாழமும், பண்பாட்டு வாசனையும் ஆங்காங்கே புத்துயிர் பெற்றுப் பொலிவதையும் சொல்லாமலிருக்க முடியாது.

அவரின் இலக்கிய சேவை மேலும் தொடரவும், அவை திருமறைக்கு அணிசேர்க்க வேண்டுமெனவும் இறையாசி கேட்டு நிறைவு செய்கிறேன்.

ஆயர் இல்லம்,
மன்னார்,
02-07-2004

✝ இராயப்பு யோசப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புப் பாயிரம்

சாகித்தியரத்தினம்,

## கலாநிதி க. சொக்கலிங்கம் அவர்கள்

**(சொக்கன்)**

"குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள். மோட்ச ராச்சியம் அவர்களுடையதே" என்பது யேசுகிறிஸ்து நாதரின் திருவாக்கு.

"குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் ஓரிடத்தில்" என்பது தமிழிலே வழங்கும் பழமொழி.

**"அன்னத்தின் தூவி அனிச்ச மலரெடுத்துச்**
**சின்ன உடலாகச் சித்திரித்த பூங்கோயில்"**

என்று குழந்தையின் தூயதும் மென்மையானதுமான எழிலை மனங்கனிந்து பாடுகின்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

**"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்"**

என்ற வள்ளுவர் வாய்மொழியை அறியாதார் யார்?

ஆக, குழந்தைகளை அன்போடு அரவணைப்பதும் அவர்களின் மழலை கேட்டுமகிழ்வதும் குறும்புகள் கண்டு சுவைப்பதும் இதயமுள்ள மாந்தருக்கு இயல்பாகவே அமைந்த பண்புகள்.

இப்பண்புகளால் தெய்வத்தையே குழந்தையாகப் பாவனை செய்து அதன் பிறப்புத் தொடக்கம் பிள்ளைப் பருவம் வரை பல நிலைகளிலே பாடிமகிழும் பத்திப் பாவாணர் சிலரையும் நம் அருமைத் தமிழ் பெற்றுள்ளமை குறிப்பிட்டுக் கூறவேண்டிய ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் வரிசையிலே முன்னோடியாகக் கொள்ளத்தக்கவர், வைணவசமய, இலக்கிய உலகிலே "பெரியாழ்வார்" என்று போற்றப்படும் விட்டுணுசித்தர். அவர் தமது நெஞ்சக் கோயிலிலே ஆவாகனம் செய்து, பத்தியிலே கனிந்து பாலனாய்க் கண்டு பாடிப் பரவப்பெற்றவன் திருமால் என்ற கண்ணபிரான். ஆண்டாளின் தந்தையான பெரியாழ்வார், தாயாகவே மாறிக் கண்ணக் குழந்தையைப் பாடும் இடங்கள் நெஞ்சக் கனகல்லை நெகிழ்ந்துருக வைப்பன; இலக்கியச் சுவையின் மகோன்னதத்திற்கு எடுத்துக்காட்டாவன.

கண்ணனோடு அம்புலியை விளையாட வருமாறு யசோதை (கண்ணனின் வளர்ப்புத் தாய். பெரியாழ்வார் தம்மை யசோதையாகப் பாவனை செய்கின்றார்.) அழைப்பதாய் வரும் இப்பாடலில் அவனது மழலையானது எம் மனச் செவிகளில் வீழ்வதும், அவனது திருவுரு, கவினார் காட்சிப் பொருளாவதும் படித்து இன்புறத் தக்கன.

**"அழகிய வாயில் அமுத ஊறல் தெளிவுற**
**மழலை முற்றாத இளஞ்சொல்லால் உன்னைக் கூவுகின்றான்**
**குழகன் சிரீதரன் கூவக் கூவப் போதியேல்**
**புழையில் வாகாதேநின் செவிபுகா மாமதி."**

இவ்வாறு தெய்வத்தைக் குழந்தையாய்ப் பாவனை செய்து பாடுவதோடு, மன்னர் போன்ற மாமனிதரையும் அதே பாவனையிற் பாடலாம் என்பதற்குத் தொல்காப்பியத்தில் (அகத்திணையியல் – 82.) வரும் பின்வரும் நூற்பாவினை எடுத்துக் காட்டுவர்.

**"குழவி மருங்கினும் கிழவ தாகும்"**

ஆனால் இப்படிப் பாடியதற்கான பழந்தமிழ் இலக்கியச் சான்றுகள் இன்று கிடைக்கவில்லை.

"பிள்ளைத் தமிழ்" என்ற சிற்றிலக்கியம் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தரால் தமது புரவலனாகிய குலோத்துங்கன் மீது முதன் முதல் பாடப்பட்டது. இதன் பெயர் குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டக் கூத்தரின் காலத்துக்குச் சில நூற்றாண்டுகளின் பின்னர், முருகன் மீதும், மீனாட்சிஅம்மை மீதும் முறையே பகழிக்கூத்தர், குமரகுருபரர் ஆகியோர் பிள்ளைத் தமிழ் பாடக் காண்கின்றோம். ஈழத்தில் நாவலர் பிள்ளைத் தமிழ், சுந்தரர் பிள்ளைத் தமிழ் முதலாக அடியார் மீது பிள்ளைத் தமிழ் பாடும் மரபு கருக்கொள்கின்றது. அரசியல் தலைவர்களும் பிள்ளைத் தமிழின் பாட்டுடைத் தலைவராவதற்குக் "காமராசர் பிள்ளைத் தமிழ்" எடுத்துக்காட்டு.

இந்நிலையில், "பாசையூரானைப் பாடு!" "வியாகுல அன்னை வெண்பா" "தூதுபோ தென்றலே!" என்ற தலைப்புக்களிலே மூன்று கவிதை நூல்களை வெளியிட்ட, கவிஞர் மு. சிங்கராயர், கிறிஸ்தவ மக்களின் பத்திக்கும் கனிவிற்கும் உரியவளாய் மட்டுமன்றி மற்றைய மதத்தினரும் ஏத்திப் போற்றிடும் மடு அன்னை மீது பாடிய "பிள்ளைத் தமிழ்" நூலினை இன்று வெளிவிடுகின்றார். தமிழிலக்கிய மரபின் அறாத்தொடர்பினைப் பேணுகின்ற கவிஞர் வரிசை ஒன்றின் கான்முளையாக அவர் இப்படைப்பின் மூலம் தம்மை இனங்காட்டியுள்ளார்.

சிங்கராயர் அவர்களின் கவித்துவம், ஓசையும் இனிமையும் வாய்ந்த சொற்களின் ஆட்சியாலும், வருணனைத் திறத்தாலும் பத்திக் கனிவாலும் படிப்போர் உள்ளங்களை மிருதியும் ஈர்க்கும் என்பதை நான் படித்துப் பெற்ற அநுபவத்தால் சாட்சி பகர்கின்றேன். மேலே குறித்தவை உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை.

தமிழை "இனிய நிலாக் கலையே" என்றும் மரியன்னையைத் "தமிழ்க் கீதச் சுவையே" என்றும் மனித குலத்தில் இறைமகன் கொண்ட கருணையைச் "செழுமைக்கருணை" என்றும் சிமியோனின் கண்ணோட்டத்தினைக் (விழியிரண்டும்) "கனிவுத்தேன்" என்றும், மரியன்னையின் நகையினை "சுகந்தமண அல்லிமொட்டு" (எதிர்வர அஞ்சி ஓடும்) என்றும் (இன்னோரன்ன மேலும் பல இடங்களிலும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞரின் வார்த்தை ஜாலங்கள் சொல்லொணா வசீகரத்தினை வழங்கின்றன.

வருணனைகளைக் கையாளும் இடங்களிலும் சிங்கராயர் "சிங்கராயரா" கவே இலங்குகின்றார். நசரேற்றூரின் வருணனை இது.

**பாட்டுக்குள் சந்தமெனப் பாலுக்குள் நெய்யாகிப்**
**பூவுக்குள் மணமும் போலப்**
**பரவிநிற்கும் மலைகடலும் பாய்ந்தநதி அருவியுமாய்ப்**
**பொலிகின்ற நசரேற் றூரில்....**
**வீட்டுக்குள் தவழ்ந்துலவும் வளர்மதிபோல் அழகியபொன்**
**விளக்குமாகி....**

மரியன்னையைப் பெரும்பாலும் வயதுவந்த, தெய்வீகப் பொலிவு கொண்ட பெருமாட்டியாகவே காண்பது இப்பிள்ளைத் தமிழின் புதுமை. அருந்தலாகவே அவரைக் குழந்தையாகப் பாவனை பண்ண நேர்ந்தமை, கவிஞரின் மிக்குயர்ந்த பத்தி நலமே என்பதற்கு ஐயமில்லை.

பிள்ளைத் தமிழ் மரபு வழிவந்த பழம்பெரும் பிரபந்தம். எனினும் "வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்" என்ற பழமொழிக்கொப்ப, சமகாலக் கொடுமைகள், அவலங்கள், தீமைகளை உணர்ச்சிபூர்வமாய் எடுத்துரைத்து அவற்றினின்றும் விடுபட அன்னையை வேண்டும் இடங்கள் நயக்கத்தக்கன.

**"கானல் நீரைக் கண்டமான்போல்**
**கொடிய வாழ்வுப் பாலையிலே**
**களைத்து ஓடித் தடுமாறிக்**
**கலங்கி வீழ்ந்தோம்!"**

என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"இல்லை உண்மைத் தெய்வமென்று**
**எண்ணி மனமே போனபோக்கில்**
**இழைத்த பாவம் எத்தனையோ?**
**என்று மனிதன் திருந்துவதோ?"**

என்றும் மனித குலத்தின் இழிவுகளைப் படிப்போர் மனங்கொள்ளுமாறு கவிஞர் எடுத்துக்காட்டும் பல இடங்கள் சிந்தனையைத் தூண்டுவனவாகும்.

"வியாகுல அன்னை வெண்பா" நூலிலே வெண்பாவாகிய புலியை வேட்டையாடி வெற்றிபெற்றுத் தாம் மரபில் வழுவாதவர் என்பதைக் கவிஞர் நிறுவினார்.

பலவேறு யாப்பமைந்த விருத்தங்களை அமைப்பதில் எந்த அளவுக்குக் கவிஞர் வெற்றி பெற்றுள்ளார் என்பது, படித்துணர்வோர் முடிவு செய்யவேண்டிய ஒன்றாகும்.

சுருங்கக் கூறுவதாயின் காட்டாறாகப் பெருகி ஓடும் உணர்ச்சிக் கவித்துவத்தில் சிறந்து விளங்கும் கவிஞர் மு. சிங்கராயர் எமது பாராட்டிற்கு உரியவரே. அவரின் கவித்துவம் வாழ்க.

நாயன்மார்கட்டு, க. சொக்கலிங்கம்
யாழ்ப்பாணம்.
01-08-2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## அருள்திரு. ஞா. பிலேந்திரன்

**கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

பதினேழாம் நூற்றாண்டின் முற்கூற்றில் இலங்கையின் வடபகுதி யில் அறிமுகம் பெற்ற கத்தோலிக்க மதம்சார் கோட்பாடுகளும், படிப்பினைகளும் மக்கள் மத்தியில் வேகமாகப் பரவுவதில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்தினாலும், இதில் இலக்கியங்கள் பெரும்பங்கை வகித்துள்ளன. கத்தோலிக்க சமயக் கருத்துக்களைத் தாங்கிக் காலத்திற்குக் காலம் தேவைக்கேற்ற வெவ்வேறு இலக்கிய வடிவங்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் அம்மானை, நாட்டுக் கூத்து, பள்ளு, ஒப்பாரி, காதல் எனச் சிலவற்றை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

இந்த வகையில் யாழ். பாஷையூரைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் முடியப்பு சிங்கராயர் அவர்களின் அண்மைக்கால ஆக்கங்கள் குறிப்பில் இடம்பெற வேண்டியவை. இவர் கவிதை வழி தம் கருத்துக்களை எடுத்துரைப்பதில் புலமை வாய்ந்தவர்.

திரு. மு. சிங்கராயர் அவர்கள் அண்மைக் காலங்களில் "பாசையூராணைப் பாடு!"1992, "தூதுபோ தென்றலே!" 2000, "வியாகுல அன்னை வெண்பா" 2001, போன்ற கவிதை இலக்கியங்களையும், "கூவிப்பறந்த கோகிலங்கள்" 2003 என்னும் உரைநடை இலக்கியத்தையும் ஆக்கியுள்ளார்.

இவர் தரமான இலக்கியங்களை ஆக்குவதற்கு வளமானதோர் பின்புலத்தைக் கொண்டுள்ளார். முப்பத்தொரு வருடங்களாக ஆசிரியராகப் பணியாற்றிய காலங்களில் பெற்ற அநுபவ முதிர்ச்சியினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தக் கருத்துக்களையும் எளிமையாகவும், தெளிவாகவும், சுவையாகவும் வெளியிடும் திறன் இவருக்குண்டு.

சிறுகதை, கட்டுரை, நாடகம் என இலக்கிய உலகிற்குள் நுழைந்தவர், தமது இருபதாம் வயதில் "பாதுகாவலன்" பத்திரிகை வழியாகக் கவிதை உலகிற்கு அறிமுகம் பெற்றார். ஈழத்தில் வெளியாகும் அனைத்துப் பத்திரிகைகளிலும் ஆசிரியர் சிங்கராயரின் கவிதைகள் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. 1970 களில் கத்தோலிக்க சமயம்சார் நாட்டுக் கூத்துக்களிலும் அதிக ஈடுபாடு கொண்டு உழைத்ததால் அதிலும் தமது திறமையைக் காண்பித்தார்.

ஆசிரியர் சிங்கராயர் "மடு அன்னை பிள்ளைத் தமிழ்" என்னும் இக்கவிதை இலக்கியத்தின் வாயிலாக மடு அன்னை மட்டில் தான் கொண்ட பக்தியைப் புலப்படுத்துகின்றார்.

தரமான படைப்பிலக்கியங்கள் கத்தோலிக்க மறைக்கு வலிவும், பொலிவும் சேர்க்க வேண்டும் என்னும் இவர் விருப்பு நிறைவு பெற இறையாசி கேட்டு, இவர்தம் இலக்கியப்பணி மேலும் சிறக்க வாழ்த்தி நிற்கின்றேன்.

ஞா. பிலேந்திரன்

யாழ்ப்பாணம்.
22-07-2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துரை

## அருட்கலாநிதி S.V.B. மங்களராஜா

**அதிபர், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து உயர்ந்து நிற்பவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புகள் தொகுக்கப்படும்போது அவர்களுடைய குழந்தைப் பருவ நிகழ்வுகளுக்குத் தனி மகத்துவம் கொடுக்கப்படுவது இயற்கை.

இதனால்தான் தவறு எங்கிருந்தாலும் அஞ்சா நெஞ்சுடன் அதைச் சுட்டிக்காட்டும் நம் அன்புக்குரிய திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல், எதுவித வேறுபாடுமின்றி எல்லா மக்களையும் அரவணைத்ததால், வாழும்போதே புனிதையென்று பெயரெடுத்த முத்திப்பேறு பெற்ற அன்னை தெரேசாள் போன்றவர்களுடைய வாழ்க்கைக் குறிப்பு நூல்களைப் பார்க்கும்போது அவர்களது குழந்தைப் பருவ படங்களுக்கும், குறிப்புகளுக்கும் தனி முக்கியத்துவம் கொடுக்கப்படுவதை அவதானிக்கலாம்.

'வளரும் பயிரை முளையில் தெரியும் - வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்' என்பர்.

சில குழந்தைகளின் 'திருவிளையாடல்'களைப் பார்த்து வளர்ந்ததும் இவர்கள் சாதனையாளராக அல்லது சமுதாயத்தில் உயர்ந்த பண்பாளராக இருப்பர் என்று எதிர்வு கூறுவர்.

இந்த இயற்கை நடைமுறைக்கு வடிகாலமைத்துக் கொடுப்பதுதான் நமது இனிய தமிழ் மொழியில் உள்ள "பிள்ளைத்தமிழ்" என்ற இலக்கிய வடிவம். இதில் அரசர்கள், சமுதாயத் தலைவர்கள், புலவர்கள், வள்ளல்கள், சமயப் பெரியார்கள் போன்றோர் உள்ளடக்கப்படுகின்றனர். இதன் உச்சக் கட்டம்தான் இறைவனையே குழந்தையாகப் பாவனை செய்து உருவாக்கப்படும் பாடல்கள், கதைகள், ஓவியங்கள், சிற்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவை. இறைவனை அடைய இப்பிள்ளைத்தமிழ் இலக்கியம் சிறந்ததோர் ஊடகம். கண்ணனின் லீலைகள் இதற்கு நல்லதோர் உதாரணம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பிள்ளைத்தமிழ் இலக்கியப் படைப்புக்கள் 500 வருடங்களுக்கு முன் நமது மண்ணில் வேரூன்றிய கிறிஸ்தவ மறையில் குறிப்பிடுமளவு உள்ளனவா என்று பார்க்குமிடத்து ஒரு வரட்சி நிலையையே காணலாம்.

கிறிஸ்தவம் மற்றைய உலகின் முக்கிய மதங்களைப் போல, கிழக்கில் ஆரம்பித்தாலும் மேற்குலகிற்குச் சென்று 16ஆம் நூற்றாண்டில் இங்கு அறிமுகமானபோது ஓர் இறக்குமதி மதமாகவே கருதப்பட்டது. அவ்வப்போது சுதேச மயமாக்கல், பண்பாட்டு மயமாக்கல் முயற்சிகள் தமிழ்மொழிப் பண்பாட்டுமுறைகளுக்கேற்ப றொபேர்ட் டி நொபிலி போன்றவர்களால் மேற்கொள்ளப்பட்டாலும், மண் வாசனையோடு கூடிய பண்பாட்டு மயமாக்கல் பரந்தளவில் இடம்பெற 20ஆம் நூற்றாண்டில் 2ஆம் வத்திக்கான் வரை காத்திருக்க வேண்டியதாயிற்று.

இறைவனின் தாயாகிய கன்னிமரியாளுக்கு கத்தோலிக்க கிறிஸ்தவத்தில் தனிப்பெரும் இடமுண்டு. ஆயினும் அவளுடைய பிறப்புமுதல் இறப்புவரை நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் பற்றிய குறிப்புகள் எல்லாம் திருவிவிலியத்தில் இல்லை.

இறைஊக்கம் பெறாத நூல்களிலிருந்தும், பாரம்பரியங்களில் காணப்பட்ட குறிப்புக்களை மையமாகக் கொண்டும் கிழக்கத்தைய திருச்சபையின் தந்தையர்கள், இறையியலாளர்களது கருத்துரைகள், மறையுரை களிலிருந்தும் கன்னிமரியாள் தொடர்பான பக்தி முயற்சிகள், திருவிழாக்கள் கிழக்கிலேயே தோற்றம் பெற்றன.

இவை மேற்குலக திருச்சபைக்கு அறிமுகமான சில நூற்றாண்டுகளின் பின் அனைத்துலக திருச்சபைக்கும் பொதுவானவையாக மாறியது மட்டுமல்ல 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் கன்னிமரியாள் அமல உற்பவி என்றும், அவள் இவ்வுலக வாழ்வின் நிறைவில் உடலோடும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவோடும் இறையருளால் விண்ணேற்பு அமடைந்தவள் என்பதும் மறை உண்மைகளாக பிரகடனப்படுத்தப்பட்டன.

கன்னிமரியாளுக்கு திருச்சபையில் வழங்கப்பட்ட சிறப்பு இறைவணை அடைய அவள்தான் மிகச் சிறந்த ஊடகம் என்பதைச் சுட்டிக்காட்டு கின்றது. கிறிஸ்துவை அறியவும், கிறிஸ்தவத்தில் வந்து சேரவும் அவள்மீது கொண்ட அன்பும், நாட்டமும் துணை நிற்கின்றன.

இதற்கு மேற்கிலிருந்து கிறிஸ்தவம் அறிமுகமானபோது கொணரப்பட்ட கன்னிமரியாள் பேரிலான பக்தி முயற்சிகள் மிகவும் பயனுள்ளவை; பெறுமதி மிக்கவை. நமது மூதாதையர் இவற்றில் நல்ல பலன் பெற்றுள்ளனர் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. அத்துடன் குறிப்பாக 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பின்பு எமது மொழி, பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கேற்ப எமது மண்வாசனையோடு கூடிய வழிபாட்டு முறைகளை, பக்தி முயற்சிகளை உருவாக்கி வளர்க்க நாம் தூண்டப்படுகின்றோம். (2ஆம் வத். ச. திருவழிபாட்டு. இல. 38) ஆனால் இந்தப் பண்பாட்டு மயமாக்கலில் நாம் செல்ல வேண்டிய தூரம் இன்னும் நீண்டதாகவே உள்ளது. இப்பயணம் மெதுவாக செல்வது உற்சாகம் தருவதாக இல்லையென்று உணரப்படுகிறது. இன்று பல் - இன, பல் - சமய, பல் - பண்பாட்டு ஆகிய சூழல்களில் கிறிஸ்தவம் அந்நிய மதமாக காணப்படுவதால் இன்னும் அதிக அவசரப் பணியாக இது மாறுகிறது. (திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல், ஆசியாவில் திருச்சபை 6-11-1999, இல. 21.)

திருச்சபையின் ஆரம்பகால பகுதியிலும், மத்தியகால பகுதியிலும், ஏன் நவீன காலத்திலும் மேற்கத்தைய லத்தீன் திருச்சபையிலும், கிழக்கத்தைய, பைசாந்திய கிரேக்க திருச்சபையிலும் தடம் பதித்த தந்தையர்கள் மற்றும் மறைநூல் வல்லுனர்கள், ஆன்மீகவாதிகள் மடாதிபர்கள் கன்னிமரியாளை மையமாக வைத்து எழுதிய பாடல்கள், தியானத் தொகுப்புக்கள், மறையுரைகள், திருச்சபையின் வழிபாட்டு நூல்கள், திருப்புகழ்மாலை மற்றும் பக்தி முயற்சிகளை மெருகூட்டியது போல, ஏன் நமது நாட்டில் தமிழ் மொழியில் உருவாகும் மரியாள் மீதான பக்தி இலக்கியங்களும் நாம் மட்டுமல்ல அனைத்துலகினரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாளுக்குச் செலுத்தும் வணக்கத்தை மேலும் மெருகூட்டத் துணைநிற்கக் கூடாதா?.

இறைவன் நமக்குத் தந்த திறமைகளையும், ஆற்றல்களையும் முழுமையாகப் பயன்படுத்தி நாம் பெற்ற பெருவாழ்வை பிறர்க்கும் பகிர்வதுதான் சிறந்த நன்றியுணர்வின் வெளிப்பாடு. இந்த வகையில் திரு. மு.சிங்கராயர் இறைவன் தமக்குத் தந்த கவித்திறனையும், 31 வருடங்கள், பெற்ற ஆசிரிய அனுபவத்தையும் சமுதாயத்திற்குப் பயன்தரும் வகையில் பயன்படுத்துகின்றார். அதையும் சரியான விதத்தில் பயன்படுத்துகின்றார்.

இலங்கையில் உள்ள யாத்திரைத் தலங்களில் இன, மத பேதமின்றிப் பெருந்தொகையான மக்களைத் தன்பால் ஈர்ப்பவள் மடு அன்னை. நாட்டுப் பிரச்சினைக்கும், வீட்டுப் பிரச்சினைகளுக்கும் இறைவனிடம் தீர்வு பெற்றுத் தரக்கூடியவள் மடு அன்னை என்று எல்லோரும் நம்புகின்றனர். இந்நிலையில் பெருந்தொகையான மக்கள் அன்னைமீது கொண்ட அன்பை வளர்க்க, அவள் வழியாக இறைவனை அடைய ஓர் ஊடகமாக “மடு அன்னை பிள்ளைத்தமிழ்” அமையும் என்பதில் ஐயமில்லை.

திரு. மு. சிங்கராயர் நீண்டகாலம் வாழவும், இவரது கவிதைப் பணி வழியாக இறைபணி தொடரவும், இறுதிவரை இவரது பேனாவின் மை ஈரமாக இருக்க வேண்டுமென்று ஆசி கூறுகின்றேன். மடு அன்னை இவரது வாழ்வுக்கும் முயற்சிகளுக்கும் வேண்டிய அருளை இறைவனிடம் இருந்து பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று மனமார வாழ்த்தி நிற்கின்றேன்.

S.V.B. மங்களராஜா

கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
01-08-2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதர் சி. கார்த்திகேசு (சேந்தன்)

அவர்களின்

# நயப்புரை

மடுஅன்னை பிள்ளைத்தமிழ் என்னும் நூலை
மனமுருக நற்றமிழால் சிங்க ராயர்
கடனாக மரபுவழி பிறழா வண்ணம்
கனியூறுஞ் சுவைசொட்டக் களிக்கு மாறு
திடமாகப் புலவோர்கள் சிந்தை நயக்கத்
தழைபரப்பி என்றென்றும் சிறந்து வாழ
மடைதிறந்த வாறாகப் பெருக்காய் ஓடி
மண்ணினிலே வளர்ந்தோங்கி நிலைக்கச் செய்தான்!

அன்னாரின் அசையாத தெய்வ பக்தி
அனைவோரின் உள்ளத்தை ஈர்க்கு மாறும்
பொன்னாக உவமையணி பொலியு மாறும்
புதுப்புதிய கற்பனைகள் பொருந்தும் மாறும்
பன்னாளும் எல்லோர்க்கும் பயனா மாறும்
பைந்தமிழின் தொல்பெருமை பகரு மாறும்
என்னாசி என்றென்றும் இருக்கு மாறும்
இறைவனையே யானேத்தி வாழ்த்து வேனே!

*சி. கார்த்திகேசு*

400, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
01-08-2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணத்தறி ஓடும்போது...!

"வையகம் வைகும் வாய்ந்த மாதருள் எண்ணில் ஆசி
துய்யகம் பொலியப் பூத்த சுந்தரி" - தேம்பாவணி

"மாதருக்குள் ஆசிபெற்ற மங்கலையாம் அன்னைமரி"
- இரட்சணிய யாத்திரிகம்.

"நிலவெனும் வதனம் நெற்றி
நெடுமழை அனைய கூந்தல்
மலரெனும் கண்கள் கைகள்
மரியம்மை அழகின் தெய்வம்!" - இயேசு காவியம்

இவ்வண்ணம் இறவாப் புகழ்பெற்ற கவிஞர்களால் போற்றப் படுபவள், தேவகுமாரன் கிறிஸ்துவின் தாயான புனித மரியாள்.

அன்புக்கு அவள் தாழாத இமயம்! அருளுக்கு அவள் நீர்சுமந்துவரும் மழைமேகம்! தியாகக் கடலிலே அவள் சலித்தெடுத்த முத்து! தாய்மையென்ற நதிக்கரையில் அவள் கைவீசி நடந்துபோகும் தென்றல்!

பூங்காவிலே சிரிக்கின்ற அர்ச்சனைப்பூவாக இல்லாவிட்டாலும், பசுமையை அள்ளிப் பொழியும் புல்லாக முளைத்துவிட்ட நிறைவோடு இதனைப் படைத்துள்ளேன். அன்புத்தாய் மரியாள் எனக்குப் போட்ட ஞானச் செருக்குத்தான், வாழ்வு பற்றிய தேடலில் பிறந்த சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான இந்த "மடுஅன்னை பிள்ளைத்தமிழ்."

அளவிடமுடியாத எவ்வளவோ ஆற்றல்கள், ஒருவரது இளமைப் பருவத்தில் அவரிடம் குவிந்து கிடப்பதாகக் கற்பனையைத் தட்டிவிடுவதுதான் பண்பாட்டுப் புலங்களைத் தொட்டுச்செல்கின்ற பிள்ளைத்தமிழின் அடிவேர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துப் புலவர்கள் பலரும் பிள்ளைத்தமிழ் நூல்களை ஆக்கியளித்துள்ளனர். நூறு வருடங்களுக்கு முன் இயற்றப்பட்ட அவற்றுள் காலத்தால் சில அழிந்துபோயுள்ளன.

கிறிஸ்தவ மறையிலும் அச்சுவாகனம் ஏறாமல் சில பிள்ளைத்தமிழ் நூல்கள் சிதைந்தொழிந்தன. அவற்றுள் வசாவிளானைச் சேர்ந்த பிரான்சிசுப்பிள்ளை என்பவரால் "இயேசுநாதர் பிள்ளைப்பாட்டு" பாடப்பட்டது. பத்துப் பாடல்களைக் கொண்ட இப்படைப்பில் எஞ்சிய ஒரு பாடல் மட்டுமே அறிஞர் அ. சதாசிவம்பிள்ளை எழுதிய "பாவலர் சரித்திர தீபகம்" என்ற நூலில் இடம் பெற்றிருப்பதாகத் தமிழ்ப்பேரறிஞர் எவ். எக்ஸ். சி. நடராஜா தமது "ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்திலுள்ள பிறசமயப் புலவர்கள் பிள்ளைத்தமிழ் நூல்கள் பலவற்றை ஆக்கியபோதும் கிறிஸ்தவமறை தழுவிய பிள்ளைத்தமிழ் நூல்கள் வெளியானது என்னவோ மிகவரிது என்ற கசப்பான உண்மையை இங்கு கூறித்தானாகவேண்டும்.

இந்த மனநெருடலை ஆற்றுப்படுத்துவதற்காக, கிறிஸ்தவ மறைப்புலத்தில் புதிய இலக்கிய அரும்புகள் முகங்காட்ட வேண்டும், அவை புதிய பரிமாணங்களைச் சந்திக்கவும் செய்யவேண்டுமென்ற முனைப்போடு மரியாள் பேரில் இத்தமிழைப் படைத்துள்ளேன்.

நண்பர்களும், அன்பு நெஞ்சங்களும் களம் அமைத்துக் கொடுத்ததினால்தான் இந்நூல் உங்கள் கைகளில் தவழ்கின்றது. தரவை நிலத்திலும் பயிரினம் தழைத்து வளரும்போது கொள்ளும் மகிழ்ச்சி இப்படித்தானிருக்குமோ!

நம்பிக்கை! அதுதான் மனிதச் சங்கீதத்தின் அடிநாதம். நம்பிக்கை யில்லாத வாழ்வு வேருழுத்த மரம்போலச் சீரிழந்து போகும் என்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றோர். இந்த நம்பிக்கையின் பின்னணியில் விவிலியக் கருத்துக்களை உள்வாங்கியபடியே புனித மரியாளுடைய வாழ்வை நோக்கும்போது உண்மையான மானுடத்தை அங்கே நாம் தரிசிக்க முடிகின்றது.

மரணிக்காமல் வாழும் மரியாளின் அன்பொன்றே மண்ணில் நாம் பெற்ற பெருங்கொடை.

அநுமன் போல் தமது திறமையை அறியாதிருக்கும் எத்தனையோ எழுத்தாளர்கள் படைப்பிலக்கியத் துறையில் நிமிர்வதற்குக் கைகொடுக்க வேண்டியது மனித உணர்வாளர்களின் கடமைதானே! கண்ணுக்குத் தெரியாத மையிருட்டில்கூட, நமக்கு வழிகாட்டுவதற்கு இறைவன் படைத்த வைரஒளி பாய்ச்சுகின்ற வானத்து விண்மீன்கள் விழித்திருக்கவில்லையா?

கம்பனுக்கு ஒரு சடையப்ப வள்ளல் இருந்ததாகக் கூறிச் செல்கிறது தமிழிலக்கிய வரலாறு. கற்றறிவில்லாத எனக்கோ...! நெஞ்சுக்குள் மரணிக்காத உணர்வுகள் எல்லாவற்றையும் வெளியில் சொல்லிவிடவா முடிகின்றது? இந்நூலுருப்பெற நேசக்கரம் நீட்டிய மனித தெய்வங்களை என் இதயம் மானசீகமாக வணங்குகிறது!

உண்மையான சமூக அக்கறையுடனும், ஆழ்ந்த இனப்பற்றுடனும் பகலிரவு பாராது மக்கள் பணியாற்றி வருபவரும், கேட்டபோதே மனமுவந்து ஆசியுரை நல்கியவருமான மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை அவர்களுக்கு முதற்கண் எனது பணிவான வணக்கத்தையும், நன்றியையும் கூறிநிற்கின்றேன்.

"ஆயிரம் முகத்தான் அகன்றதெனினும், பாயிரம் இல்லது பனுவல் அன்று" என்ற தமிழ்மரபை நிறைவு செய்யக் காத்திரமான, கருத்தாழமுள்ள ஒரு சிறப்புப்பாயிரத்தைத் தந்துதவிய மூதறிஞர் கலாநிதி க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்களுக்கும் என் அன்பான நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகவுரையின் மூலம், தமது தீர்க்கதரிசனம் நிறைந்த வழிகாட்டலையும், தீட்சண்யமான அன்பையும் என்மேல் பொழிந்து நின்ற அமலமரித் தியாகிகளின் மாகாண முதல்வர், அருட்பணி அ. ஜீவேந்திரா போல் அவர்களுக்கும் என் நெஞ்சங்கனிந்த நன்றிகள்.

வாழ்த்துரையோடு என் வளர்ச்சிக்குக் கைகாட்டியாய் நின்றுதவிய அருள்திரு. ஞா. பிலேந்திரன் அவர்களுக்கும் என் உள்ளம் நிறைந்த நன்றிகள்.

நல்லாதரவுடன் விதந்துரை தந்து பேரன்பு காட்டிய அருட்கலாநிதி S.V.B. மங்களராஜா அவர்களுக்கும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

நயப்புரை தந்த பண்டிதர் சி. கார்த்திகேசு அவர்களுக்கும் என் நன்றி.

ஓவிய நண்பர் ரமணிக்கும், அதனைக் கண்ணுக்கு விருந்தாக்கிய குரு பதிப்பகத்தினருக்கும், நூலை அச்சேற்றிய புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தினருக்கும், அன்பான இலக்கிய நெஞ்சங்களுக்கும் என் இதயபூர்வமான நன்றிகள்.

மு. சிங்கராயர்

955/9, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
02-08-2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லவனே! யேசுநாதா!

வல்லவனே! வாழ்வூற்றே! ,யேசு நாதா!
வற்றாத கருணைமுத்து விளையுங் கடலே!
நல்லுதிரப் புனல்கொட்டி ஞாலம் மீட்ட
ஞானவொளிக் கதிரவனே! தேயா அன்பின்
சொல்லுருவே! தென்றலிலே ஆடும் பூப்போல்
சுகந்தத்தைத் தருந்தியாக வடிவே! இளகாக்
கல்லிதயப் பெருங்கயவன் நானுந் தொடுத்த
கவிமலரை உன்பாதம் வைத்தேன் காப்பாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழெனக்குத் தருவாய் அம்மா!

விடிபொழுதும் புலரவில்லை வழியில் தீண்டும்
விரியன்கள் நெளிகின்ற வேளை மலையின்
முடியுரசித் தொட்டகரு மேகங் கொட்டும்
மழைபோல விழியிலலை பொங்க நெஞ்சின்
அடிவேரைச் சஞ்சலங்கள் மொய்த்துத் தின்ன
அழுதமுகஞ் சிவக்கமடு அன்னை உந்தன்
மடிதேடி வந்தமுழுக் கிறுக்கன் கவியால்
மாலைசூட்டத் தமிழெனக்குத் தருவாய் அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகாண்ட தமிழே!

கற்பனைக்கும் எட்டாத காலந் தொட்டுக்
கடல்சூழும் உலகாண்ட தமிழே! காணாப்
பொற்பமைந்த இனியநிலாக் கலையே! சங்கப்
புலவர்கைத் தொட்டிலிட்டு வளர்த்த செல்வி!
அற்புதந்தான் அம்மாவுன் இளமைக் கோலம்!
அறிவளவில் நான்பனையின் வடலி! பொதிகை
வெற்பினிலே பிறந்தவளே! தாயே! கசக்கும்
வேம்பான என்பாட்டை வாழ்த்த நீவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவையடக்கம்

வேங்கை முன்னால் தவளைபாய்ந்து
வித்தை காட்டுந் தன்மைபோல
ஓங்கி எழுந்த தமிழ்உணர்வால்
ஓதும் பிள்ளைத் தமிழ்செய்தேன்
மூங்கில் கிடைத்தாற் குழலூத
முந்தும் பிறவி மூடனெனை
ஈங்கு சான்றோர் எடுத்தணைத்து
ஆளல் அவர்தங் கடனன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னற் சுவைபிழிந்த கலைப்பிறவியாளனும்

என்னைக் கல்விப்புலத்தில்


ஆளாக்கிவைத்த பெருமகனும் ஆகிய

முன்னாள் ஆயர்

## பேரருட்கலாநிதி

# அமரர் வ. தியோகுப்பிள்ளை

அவர்களுக்கு



| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| **09-04-1917** | **25-04-2003** |

*அலையெறியும் கடல்வயிற்றில் முத்து உண்டு*
*அன்னையிடம் வற்றாத கருணை உண்டு*
*மலைமடியில் மணந்தோய்ந்த அகிலும் உண்டு*
*மாசறியாப் பிறரன்பில் மனிதம் உண்டு*
*விலையில்லாப் பெருங்கொடைக்கு வெய்யோன் உண்டு*
*வேருக்கோர் துணைவிழுதும் உண்டு ஆனால்*
*தலைதடவி இலையீந்த தியோகுப் பிள்ளை*
*தாளிணைக்குக் காணிக்கை தந்தேன் இந்நூல்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. காப்புப் பருவம்

பரம்பொருளான தந்தை, மகன், தூயஆவியுடன் ஞானத்தில் முதிர்ந்து கனிகொடுத்த நல்லோர்களையும் குழந்தை மரியாளைக் காக்குமாறு கேட்குமிந்தக் காப்புப்பருவம் மூன்றாம் திங்களில் நடந்தேறும் நிகழ்வாகும்.

## திருத்தந்தை

சொல்லால் வானப் பந்தலுறை
சூரியன் நிலவு தாரகைமண்
சுழலும் கடலும் நதிமலையும்
சீதத் தென்றல் கொடிமலரும்
எல்லாம் இனிதே ஆக்கிவைத்து
அதனால் மங்கலஞ் சங்கமிக்க
ஆதாம் ஏவாள் படைத்தவற்றா
அன்பே! அருளைப் பொழியமுதே!
கல்லாய்ப் போன மனத்தினாலே
குற்றம் பலவும் இழைத்ததனால்
குமாரன் தன்னையே கொடுத்ததமிழ்க்
கீதச் சுவையே! கன்னிமைக்கோர்
நல்லாள் தூய மரியாளை
நம்பித் தொழுவோர் துயர்நீக்கும்
நாத வடிவைத் தெய்வீக
நலமே துலங்கக் காத்தருளே! 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைமகன்

காவல் கிடந்து சாத்தானும்
குழைந்த ஏவாள் தனைமயக்கிக்
கருமம் எளிதில் முடித்திடவே
கவலை இருள்தான் சூழ்ந்ததையோ!
சீவ மாந்தர் குலம்மீது
செழுமைக் கருணை ஆறாகிச்
சொரிந்த மூத்த தூயதந்தை
சொன்ன வார்த்தை உருவாகிப்
பாவ விலங்கை உடைத்தெறியப்
புவியில் மனிதப் பிறப்பெடுத்துப்
பாரச் சிலுவை தோளேந்திப்
புதிய வீட்டைத் திறந்துவைத்த
தேவ குமாரன் யேசுவேயுன்
தளிர்க்கை தூக்கி ஏழுலகத்
தாய்மைக் கொழுந்து மரியாளைத்
தரணி வாழ்த்தக் காத்தருளே! 2

## தூயஆவி

பாவி எங்கள் வாழ்வுபூக்கப்
பக்தி அறிவு தேவபயம்
பேசும் அன்பு திடம்ஞானம்
பரிந்து ஏழு கொடையளித்தாய்!
கூவி அழுது புலம்புகின்ற
கண்ணீர்க் கடலாம் வாழ்வினிலே
கிடந்து வாடும் மாந்தருக்குக்
கரையைக் காட்டும் ஒளிவிளக்கே!
தூவி விரித்த பூமஞ்சந்
தானா வாழ்வு? சுமைதானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையைக் காணத் தேடுமன்பர்
துன்பந் தீர்க்கும் பெருந்தூய
ஆவி என்றே மண்புகழும்
அருளின் பெருக்கே! அடைக்கலமாய்
அல்லி வடிவப் பத்தினியை
அன்னை மரியைக் காத்தருளே! 3

## வேறு

## எலிசபெத்

அதிமதுர நூல்சொல்லும் நெறியில் ஆழ்ந்து
அதன்வழியே நடந்துலகில் அன்பைப் பேணி
மதிமதுரச் சந்தானாள் மண்ணில் தந்த
மாட்சிகொள்ளும் அன்னையான மரியாள் தன்னை
இதுமஞ்சம் என்றிறைவன் பாதந் தன்னில்
இறுதிவரை தலைசாய்த்துத் தொண்டு செய்த
புதுயோகி சக்கரியாஸ் துணைவி என்றே
பூமிபோற்றும் எலிசபெத்தே! கண்போல் காப்பாய்! 4

## சக்கரியாஸ்

சீரோடிக் கொழிக்கின்ற யூதே யாவில்
சூலோடித் துளிர்க்கின்ற தவத்தில் என்றும்
வேரோடித் தழைக்கின்ற வேந்தன் என்று
வேதங்கள் புகழ்பாடும் வெள்ளை ஞானி
நீரோடி வரும்யோர்தான் ஆற்றில் யேசு
நாதனுக்கு முழுக்கருளி அபியா குலத்தில்
தேரோடும் அருளப்பன் தந்தை யான
தூயவனே! சக்கரியாஸ்! மரியைக் காப்பாய்! 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிமியோன்

வெள்ளம்போல் முகமலரில் அமைதி பொங்க
விழியிரண்டில் கனிவுத்தேன் ததும்ப மண்ணில்
கொள்ளையின்பம் *தானிதுவோ என்ற தோற்றம்!
கருணைமழை சொரிந்தபார்வை! புவியை ஆளும்
தெள்ளுதமிழ் நூல்புகட்டும் தெளிந்த ஞானம்!
தரணியிலே பற்றறுத்த சிமியோன் நீயும்
அள்ளுகின்ற கற்பழகுத் தூய மரியை
உன்னாசி தந்துலகில் உயிர்போல் காப்பாய்! 6

## ஆனாள்

வீசுகின்ற இளந்தென்றல் மலரைக் கொஞ்சி
விளையாடும் சலசலத்து அருவி பாடும்
பேசுமுயர் நல்லறங்கள் மக்கள் நெஞ்சப்
புலத்தினிலே கதிர்சாய்க்கும் ஏடும் வாழ்த்தக்
காசினியில் மங்காத யூத தேசம்
கண்டதவ மூதாட்டி! ஆனாள் நீயும்
தேசிகனாம் இறைமகனைத் தந்த அன்புத்
தாயான மரியாளைக் காத்து அருள்வாய்! 7

## சூசை

கனிபிழிந்த தேன்சுவைக்கும் கிளிகள் பொய்கை
குளித்தெழும்பும் மேதியினம் களிக்க வயலில்
இனிமைதரும் நெல்மணிகள் குலுங்கத் தெங்கின்
இளநீரைப் பந்தாடி மந்தி துள்ளும்
பனிமலர்கள் காற்றிலாட வண்டு கிள்ளும்
புகழ்சூடும் யூதேய மகனே! முத்தே!
புனிதவள! மாதவனே! மரியாள் தன்னைப்
பிரியமுடன் காத்தருள வேண்டும் ஐயா! 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு
# கபிரியேல்

சீலந் துகள்பட சிறந்த நீதி
செகத்தில் மடிந்தவேளை
சிறுமை மனிதரே செய்த கொடுமை
சாகா வரம்பெற்று
ஞாலக் கழுத்தினை நெருடி நின்று
நாசக் கூத்தாட
நெஞ்சங் கலங்கிட என்ன நேரும்?
நினைவே வலிக்குதம்மா!
ஆலம் விழுதுபோல் கட்டி அணைத்து
இன்னல் தீர்த்திடவே
ஏக்க நிலையினைப் போக்க என்றும்
அன்பின் பிரவகிப்பால்
காலம் அறிந்துமே பெய்த மழைபோல்
கன்னி மரியிடத்தில்
கரும்புச் செய்தியைச் சொன்ன கபிரியேலே!
காப்பாய் குலமகளை! 9

# இறைவாக்கினர்

தீய நினைவினை நெஞ்சில் தாங்கித்
திரிந்த மனுக்குலத்தின்
தவறை உணர்ந்துமே நிமிர வைக்கத்
துன்பந் துடைத்தகற்ற
நேய உணர்வொடு எண்ண விழுது
நெஞ்சில் ஊடுருவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்த வழியினைத் திரும்பிப் பார்த்து
நாளை விடிவுகாண
மாய வாழ்விலே மயங்கிப் பின்னே
மீள எழுந்திருந்து
மனிதம் விழிக்கவே கடலில் படகாய்
மூழ்கித் தடுமாறத்
தூய வார்த்தையால் மனத்தின் இருளைத்
துரத்தி ஒளியேற்றும்
தேவ மரியினை இறைவாக் கினரே!
தொழுது காப்பீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. செங்கீரைப் பருவம்

ஒரு காலை மடித்து மறுகாலை நீட்டிப் பிஞ்சுக் குழந்தை தன் பஞ்சுக் கைகளிரண்டையும் மண்ணில் ஊன்றி, முகந் தூக்கிப் பார்த்து, வாய்திறந்து துப்பிவிடும் குதலைமொழி பேசி, அங்குமிங்கும் முகத்தை ஆட்டும் இச் செங்கீரைப்பருவம் ஐந்தாம் திங்களில் நடந்தேறும் நிகழ்வாகும்.

கற்கண்டுக் கவியமுதம் தெவிட்டினாலும் சோலைநறுங்
கனிச்சாறும் தேனும் பாலும்
கலந்தபாகும் நாவினிலே கசப்பைவாரி இறைத்தாலும்
கண்ணெட்டும் உலகை வெல்லும்
சொற்கண்டு அஞ்சுகமே கூச்சமுற்று நிற்குமம்மா!
செங்கனிவாய் சிந்தும் நகைக்குச்
சுகந்தமண அல்லிமொட்டு எதிர்வரவே அஞ்சியோடும்
செந்தூர வண்ணம் காட்டும்
புற்கொண்டு இழைத்தபசும் வழிமிதித்தால் கால்வலிக்கும்
பருவமயில் அழகு சொல்லப்
பொங்குநிலா ஒளியுடுத்துக் கோடிமலர் முகமெடுத்த
பொன்மகளே! எந்தை அருளால்
முற்கொண்டு திவ்வியமாய் முருகோடித் தாயாக
மலர்ந்தவளே! செங்கீரை ஆடு!
மண்ணுலகே போற்றுமுந்தன் பூங்குமுத வாயாலே
செங்கீரை யாடி யருளே! 11

பாட்டுக்குள் சந்தமெனப் பாலுக்குள் நெய்யாகிப்
பூவுக்குள் மணமும் போல
பரவிநிற்கும் மலைகடலும் பாய்ந்தநதி அருவியுமாய்ப்
பொலிகின்ற நசரேற் றூரில்
வீட்டுக்குள் தவழ்ந்துலவும் வளர்மதிபோல் அழகியபொன்
விளக்குமாகி அறிவு கெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கித்து விழியிழந்த குருடரெலாம் மீட்படைய
வார்த்தையினைத் தந்த திருவைக்
கூட்டுக்குள் சிறகணைத்து அன்னம்மா வளர்த்தெடுத்த
கிளிக்குஞ்சைக் கோல மயிலை
கன்னிமையின் அருவியிலே கண்டெடுத்த தரளத்தைக்
கரங்கூப்ப வானை முட்டும்
காட்டுக்குள் அருள்மணக்கத் திருமடுவை ஆள்பவளே!
கருணையாலே செங்கீரை ஆடு!
கட்டழகே! அமுதைவார்க்கும் தேன்கிண்ண வாய்திறந்து
செங்கீரை ஆடி யருளே! 12

கறந்தெடுத்த அமுதப்பால் பசுமடிக்கு மீளாது
கொட்டிவிட்ட சொல்லைக் கையால்
கூட்டியொன்றாய் அள்ளிவிட முடியாது என்றதொரு
கருத்தையென்றும் புரிந்தி டாமல்
திறந்துவிட்ட ஆசையாலே வானவில்போல் நிலையற்றுத்
திரைகடலில் படகாய் ஆடித்
துன்பத்தில் முக்குளித்துப் புகைபடிந்த ஓவியம்போல்
துணைதேடிச் செல்லும் வேளை
அறுந்தலைந்த பூங்கொடிக்குக் கொழுகொம்பாய் ஆண்டவனே
அளித்தபெருந் தியாக மலையை
ஓவியனும் எழுதாத ஓவியத்தை ஏழுகடல்
அலையெழுந்தே புகழும்! உலகில்
பிறந்துவிட்ட பாசவிழி அணைக்கவரும் பெருமகளே!
புல்நுனிமேல் பனியுந் தங்கிப்
பொங்குமடுப் பூக்காட்டில் துள்ளியாடும் புள்ளிமானே!
செங்கீரை ஆடி யருளே! 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

சின்ன மலரை எடுத்தொன்றாய்ச்
சேர்த்து முடித்த பூங்கழலும்
சிறகு விரித்த செவ்வானச்
சிட்டுப் போன்ற நல்லழகும்
பொன்னை முத்தைப் பவளத்தைப்
பொங்கும் நிலவைக் கண்ணிறுத்திப்
பேயை நோயை ஓடவைத்துப்
புனிதம் வளர்த்த பெருமாட்டி!
கன்னற் பாகைத் தேனுடனே
கலந்து சுவைக்கும் சொல்லழகைக்
கதிரால் சிரிக்கும் மலரழகைக்
கண்டேன் உந்தன் கண்ணழகில்!
அன்னப் பறவை தடாகத்தில்
அழகாய் நீந்தக் கண்டுமனம்
உருக்கும் சதங்கை ஒலிகேட்க
அம்மா! செங்கீரை ஆடேன். 14

வாடும் பயிர்க்கு வளமூட்ட
வானம் பெய்த மழைபோல
வந்து விழுந்தாய் பூமியிலே
விடியல் காட்டும் வெள்ளியாக!
ஓடும் புவியின் உயிர்நதிகள்
ஒருநாள் வற்றிப் போகுமன்றோ!
உந்தன் அருளின் விழியூறும்
அன்பு வெள்ளம் வற்றாது
வீடும் 'ஒளியில் விழாக்காண
வையம் எல்லாம் கைகுவிக்க
வல்ல தேவன் புகழ்பாட
வருவாய்! குளிர்ந்த நிழல்மரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடும் மருத மடுவினிலே
சுடரும் பொன்னே! சந்தங்கள்
சொட்டும் மழலை மொழிபேசிச்
செங்கீரை ஆடி அருளே! 15

கானல் நீரைக் கண்டமான்போல்
கொடிய வாழ்வுப் பாலையிலே
களைத்து ஓடித் தடுமாறி
கலங்கி வீழ்ந்தோம்! வடிகின்ற
தேனில் குளிக்கும் வண்டினங்கள்
தென்றல் சொல்லும் மந்தகாசத்
தூதில் மயங்கும் மடுப்பதியில்
தவழும் அழகுக் குவமையேது?
வானில் அரசு புரிகின்ற
வல்ல தேவன் தூதர்கள்
வாழ்த்திப் பாடி அடிவீழ்ந்து
வணங்கும் மகளே! பன்னிரண்டு
மீனில் மகுடந் தரித்தவளே!
மகிழ்ந்து ஆடு செங்கீரை!
மின்னும் பவள நகைசிந்தி
செங்கீரை நீயும் ஆடு! 16

எங்கு நோக்கிப் பார்த்தாலும்
இருளின் கொடிய பேயரசு!
எதிலும் பாவ விழுதோடி
எழுந்த களையின் அட்டகாசம்!
பொங்குங் கடலில் தள்ளாடும்
படகாய் அலைந்து பதறிநீறு
பூத்துச் சுட்ட பாவத்தீ
பொறியைக் கக்கும்! மின்னுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கம் எல்லாம் தங்கம்போல்
அழகு காட்டி இளங்காற்றில்
ஆடும் மலர்கள் சிலிர்த்துமின்னல்
ஒளியை வீசும் மடுமண்ணில்
சங்குக் கழுத்தில் தொங்குமாலை
சின்னக் கீற்று நிலாப்போலச்
சுடரப் பூவாய்ச் சிமிழ்திறந்து
செங்கீரை ஆடி வாவேன்! 17

## வேறு

வெண்ணிலவில் களங்கம்போல் விழுந்துவிட்ட பாவமாசு
வல்லபரனைத் தூர எறிந்து
விண்ணரசை மனுக்குலமே பறிகொடுத்து விழிமழையில்
வெப்பிசாரங் கண்ட வேளை
கண்மணியை இமைபோலக் காத்தென்றும் அன்புசெய்யக்
கருணையொடு பாசங் கொண்டு
பெண்ணிலவாய் பூமிக்கு வந்தவளே! மரியாளே!
புத்தமுதச் செங்கீரை ஆடு! 18

கொலைகளவு சூதுபொய்யால் குமைகின்ற நெஞ்சமெலாம்
குருதிசிந்தி யுத்த களம்போல்
நிலைமாறி நாதங்கள் அவிழுகின்ற வீணைபோல
நெக்குருகி அழுத மனிதம்
தலைநிமிரத் தேசங்கள் கடந்துஇறை நேசத்தைத்
தரணியிலே வளர்த்த செல்வி!
விலைமதிக்க முடியாத வைரமணிக் கைகொட்டிச்
செங்கீரை ஆடு தாயே! 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தத்தால் வண்டொன்று சாரங்கா பாடத்தேன்
சொரிந்தமலர் வனத்தில் நானாம்
பித்தத்தால் அகந்தையுடன் கூத்தாடும் குரங்கைப்போல்
பிறரன்பை விலக்க இனிக்கும்
முத்தத்தால் பூவிலங்கு போடுகின்ற தாயவளின்
முந்தானை தழுவ இறைவன்
சித்தத்தால் வந்தவளே! முன்னங்கால் மடித்திருந்து
செங்கீரை ஆடி அருளே! 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. தாலப் பருவம்

கட்டிக்கொஞ்சும் இளம் மல்லிகை மொட்டாம் குழந்தையைத் தொட்டிலில் போட்டுச் சுற்றி நிற்கும் பெண்கள், குயிற்குரலால் தாலாட்டுப் பாடி அதைத்துயில வைக்கும் இத்தாலப் பருவம் ஏழாம் திங்களில் நடந்தேறும் நிகழ்வாகும்.

இல்லை உண்மைத் தெய்வமென்று
எண்ணி மனமே போனபோக்கில்
இழைத்த பாவம் எத்தனையோ?
என்று மனிதன் திருந்துவதோ?
கல்லை மெழுகாய் உருக்கிவிடும்
கருணைக் கடலாம் நல்லிறைவன்
கண்ணில் பூவாய் எடுத்தொற்றக்
குழந்தை மரியைத் தந்தானே!
முல்லைக் கொடிபோல் காற்றிலாடி
மோதி வீழ்ந்து நெட்டுயிர்த்து
மனிதன் மறையின் வழிமறந்தே
மேலாம் நீதி துறந்தனனே!
சொல்லின் உருவாய் வந்தசெம்மல்
சூழ்ந்த பாவந் தீர்க்கதூதன்
சேதி கேட்ட மாதவப்பொன்
சேயே! தாலே தாலேலோ! 21

தேடும் வளங்கள் திக்கெட்டும்
ததும்பி ஓடும் யூதநாட்டில்
தூய அன்னாள் யுவக்கீனும்
தவமே செய்து பெற்றபொன்னைக்
கூடும் மகிமைத் தாவீது
குலத்தே உதித்த புனிதகுசை
கைப்பி டித்த திருமகளை
கன்னித் திலகம் போன்றவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடும் கவிக்குத் தேமாவைப்
பாழுந் துயரைத் துடைப்பவளைப்
பொலியும் மூன்றாம் பிறையைமலர்
பூக்கும் வன்னிக் கானகத்தில்
ஆடும் வண்ணத் தோகையினை
அமுத வடிவைத் தாலேலோ!
இணையில் லாத புனிதத்தை
ஏற்றித் தாலே தாலேலோ! 22

வாடிக் கருகும் பயிர்க்குலமே
வந்து போகும் கருமேக
வடிவில் மழையை வாழ்த்திநிற்கும்
விடிவை நோக்கிக் கால்வலிக்க
ஓடி வந்தோம் மடுப்பதிக்கு
ஓசை கெடாமல் நினைந்துருக
அருளே நிறைந்த மரியிருக்க
இனியும் என்ன வேண்டுமம்மா!
கோடி செல்வம் பெற்றிட்ட
குபேர வாழ்வும் ஈடாமோ
குமுத நகைக்கு? பொன்வண்டுக்
குலமே வாயில் தேனூட்டத்
தோடி குயிலும் பாடட்டும்!
துள்ளி மானும் ஆடட்டும்!
தென்றல் மாலை போடட்டும்!
தாலேலோ! அமுதே தாலேலோ! 23

கத்தும் விலங்கும் மாதாபேர்
காதில் கேட்டால் குழைந்தடங்கும்
கழனி பூத்த நெல்மணிகள்
கன்னித் தாயே! என்றசையும்
முத்து விரித்த நெடுவானம்
முழுதும் மரியாள் வண்ணந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றும் பச்சைக் கானகத்து
முடியும் அவளின் சிரசினிலே!
தத்திப் பறக்கும் புள்ளினங்கள்
தாயின் எளிமைப் பிரசன்னம்!
தெளிந்த அருவி நுழைந்துவரத்
தோப்பாய்க் குலுங்கும் மடுப்பதியில்
கொத்துக் கொத்தாய் அருட்கனிகள்
கொடுத்துச் சிவக்கும் பூங்கரங்கள்
கொண்ட மரியே தாலேலோ!
குத்து விளக்கே! தாலேலோ! 24

ஆதிப் பெண்ணாம் ஏவாளை
அழகு வனத்தின் கனிகாட்டி
ஏய்த்த பேயின் சூழ்ச்சியினால்
எங்கள் கதையே கெட்டழிந்து
மீதி நெஞ்சின் அவலங்கள்
மூளுந் தீப்போற் தொட்டுலுப்ப
மீட்பும் ஒருநாள் வராதோ?
முளைத்து எழாதோ விடிவெள்ளி?
சேதி தூதன் வந்துசொல்லச்
செகமே மகிழ்வால் பால்போல
சூழ்ந்து நுரைதான் பொங்கிடவே
சிறந்த நாடாம் கலிலேயா
சோதி மணியாய்ச் சுடர்வீசச்
சேற்றில் மூழ்கும் யானைபோலச்
சமைந்த மனிதன் தனக்குமுடி
சூட வந்தோய்! தாலேலோ! 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

கொண்டலும் வாரி எறிந்த கொடிபோல் கிடந்தழுத
குவலயந் தேற்றி எடுத்துக் கண்ணீர் துடைத்தவளே!
கண்டதும் உருகிக் கருணை பெருகி ஊற்றெடுக்கும்
கன்னிமை வற்றாக் கடலில் கலக்கும் அருள்நதியே!
வண்டினம் பொன்போல் வண்ண மலரில் கண்ணுறங்க
வருமிளந் தென்றல் சாமரம் வீசும் மடுவுறையும்
மண்டலம் ஆளும் மன்னர் போற்றுந் தாவீது
மரபிலே வந்த தங்க மயிலே! தாலேலோ! 26

கண்ணிலே ததும்பும் நீரைக் கொட்டி எந்நாளும்
கவலையில் மூழ்கும் மனிதர் கூட்டம் நீதியின்றி
எண்ணிலாப் பாவஞ் செய்து இறைவன் வழிமறந்து
எத்தனை யுகமாய்த் தொடர்ந்த ஈன நிலையகற்ற
விண்ணிலே அரசு புரியும் வேந்தன் மனுவாகி
வையகம் மலர்ந்து சிறையால் மீட்டு வாழ்வுகொடுக்கப்
புண்ணியங் குவித்த காலைப் பொழுதே! தாலேலோ!
பவித்திர ஞான அழகின் மகளே! தாலேலோ! 27

கள்ளவிழ் வண்ண மலர்கள் குலுங்கும் பூங்காவில்
காற்றிலே மணந்தான் பொதிந்து வீசும் ஒருபுறமே
புள்ளொலி எட்டுத் திக்கும் பொழியுங் கதகதப்பு
பைந்தமிழ் அரங்கு போலக் கோலங் காட்டிநிற்கும்
துள்ளிடும் அருவிப் பாடல் நெஞ்சைத் தாலாட்டும்
துயரிலும் இன்பம் பாதி என்றே தொடர்ந்துசொல்லும்
அள்ளியே கையால் அணைத்துக் குலவ மைகுளித்த
அழகிய விழிகள் மூடித் துயில்வாய் தாலேலோ! 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

ஆசையெனும் புயலிடையில் ஆடி நொந்து
ஆழ்நரகு போலவாழ்வில் அவலம்! தெய்வப்
பூசையெலாம் மறந்துபாறை கிழித்து ஓடும்
பசியவேராய் வலியநெஞ்சை இளக்கி மீட்பை
யேசுபிரான் மன்னுயிர்க்கு ஈந்து சென்ற
ஒருவெற்றி நாள்காண வழியே தந்த
மாசகன்ற புதுமலரே! மரியே! தாலே!
மதுரமொழி அஞ்சுகமே! மணியே! தாலேலோ! 29

தன்னின்ப விண்ணரசு தனையே விட்டுத்
தாரணியில் கொக்கரிக்கும் தொல்லை நீங்க
அன்பெனும் விளக்கேந்தி அந்த கார
இருளோட்டப் பிரகாசம் பரப்பி நின்று
பொன்மனத்தால் மன்னிப்பால் புனிதம் காத்துப்
பாவத்தின் முடைநாற்றம் கலைத்த யேசு
மின்னொத்த தளிருடலைக் கோயில் செய்த
மரியாளே! ஆணிமுத்தே! தாலே தாலேலோ! 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. சப்பாணிப் பருவம்

இருகைகளையும் குழந்தை ஒருங்குசேர்த்துக் கொட்ட வைத்துத் தப்பாமல் சுற்றிநிற்கும் பெண்கள், சப்பாணி கொட்டும்படி அதனை கெஞ்சிக் கேட்கும் இச்சப்பாணிப் பருவம் ஒன்பதாம் திங்களில் நடைபெறும் நிகழ்வாகும்.

எல்லோரும் மறைகாட்டும் வழிசென்று இறைநீதி
ஒளியுமிழ்ந்த தியாக வாழ்வில்
அன்பிலுள்ளம் நெகிழவைக்க அரவணைப்பில் மகிழவைக்க
எழுந்துநின்ற செல்வத் திருவே!
இல்லாமை செத்தொழிந்து பொல்லாத மண்ணுலகம்
இன்பநதி நீந்தி யாட
அகவைமூன்றில் படியேறி அமலனைக்கை தொழுதவளே!
எந்நாளும் தவத்தில் வளர்ந்து
கொல்லாமை கண்டதூயன் தவக்குரிசில் யுவக்கீனும்
குலமகளாம் அன்னம் மாளும்
கொடையெனவே பெற்றளித்த குமிழ்ச்சிரிப்புக் கொட்டுகின்ற
குங்குமப்பூ வடிவே! மரியே!
வல்லோனாய் வானுலகை விட்டுநீங்கித் தேனமுத
வார்த்தையுரு வாக வந்து
வன்சிலுவை சுமந்தவனைத் தந்த செல்வி!
சப்பாணி கொட்டி யருளே! 31

அதிமதுர கவிக்கழகு இனியசந்தம் விரிந்திருக்கும்
ஆழ்கடலுக் கழகு அலைகள்
எல்லையிலா நீலவானந் தனக்கழகு நித்திலங்கள்!
அனைத்தழகே அமைதித் தூறல்!
பதிமகிழுஞ் சான்றோர்கள் தினம்புகழும் யூதேயா
பூரித்து ஆடக் கண்டு
பொன்னினொளிச் சூரியனும் போதைதரும் சந்திரனும்
புன்னாக வராளி பாடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதியளித்துத் தழுவிமெல்லக் கோழிபோலச் சிறகணைத்துக்
காத்திட்ட அன்புச் சிமிழே!
கரைமீறி அலைபாயும் கருணைகண்டு அன்றொருநாள்
கிடைகாத்த இடையர் பணிந்த
மதியழகு பழிக்கும்பூ முகம்படைத்த நாயகியே!
சப்பாணி கொட்டி யருளே!
மகிமைபொங்கும் மணிக்குடிலே! தவமாட மணிப்புறாவே!
சப்பாணி கொட்டி யருளே! 32

காற்றடிக்க மரமசைந்து, கழன்றோடும் சருகுகள்போல்
கலங்கியழும் பூமி வாழ்வைக்
கல்லின்மேல் எழுத்தாலே பொறித்திட்ட கதையாகக்
கருதியிங்கு காலங் கழித்தோம்!
நேற்றிருந்தார் இன்றில்லை என்றநீதி அறிந்திடாமல்
நீதியன்பு பேணா தென்றும்
நின்றதொரு பட்டமரம்போல் நெஞ்சுக்குப் பொய்யுரைத்து
நாமெல்லாம் கண்ட தென்ன?
ஊற்றுகின்ற துளிநீரும் பயிருக்கே உணவானால்
உள்ளத்தில் மகிழ்வு பொங்கும்!
உதவாத களையினைப்போய்ச் சேருவதால் பயனேதும்
உண்டாமோ சொல்வீர் ஐயா!
சாற்றுகின்ற மறைத்தளத்துக் கோபுரத்தின் கலசமேறிச்
சத்தியத்தின் கொடிதான் பிடித்த
செம்மலரே! முன்னிருந்து செந்தாழைக் கையூன்றிச்
சப்பாணி கொட்டி யருளே! 33

பொன்மனத்தால் நாளெல்லாம் பூரிக்கும் தொண்டுசெய்து
பிறர்மகிழக் காண்பர் மேலோர்
புடமிட்ட தங்கம்போல் சுடர்வீசித் திக்கெட்டும்
பட்டறிவே அவரின் தேடல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமுமு விடிவுநோக்கி உற்றநோய்க்கு மருந்துகாண
உழைப்போரின் முயற்சி தன்னை
உப்பில்லாப் பண்டம்போல் குப்பைக்குள் எறிகின்ற
உல்கத்தில் உயிரில் கலந்த
அன்புணர்வால் நெஞ்சுவிம்மிப் புடைக்கின்ற வளனையுந்தன்
ஊன்றுகோலாய்ப் பிடித்துத் தங்க
உதரத்தில் சுமந்துவேத நாயகனைப் புவிக்கீந்த
அருள்நிறைந்த மரியே! என்றும்
தன்பணிவால் தனைமறுத்துத் தியாகத்தால் மலைமீது
தீபமான மகளே! மண்ணில்
தித்திக்கும் அருளமுதை எத்திக்கும் பொழிபவளே!
சப்பாணி கொட்டி யருளே! 34

அறுந்துவிட்ட கொடிபோல நெஞ்சுவேகும் நினைவோடு
ஏங்கிநின்று அழுவோ ருக்கும்
அலைகடலில் துரும்பெனவே அவலந்தான் வாழ்வென்று
அங்கலாய்த்த பேர்க ளுக்கும்
துறந்துவிட்ட பொருளுறவை அன்புணர்வை முகவரியைத்
தொலைத்துவிட்டுத் தவிப்போ ருக்கும்
துயரமெனும் அக்கினியில் வீழ்ந்தபுழுப் போற்துடித்த
தூயஅன்னைக் குலத்தோ ருக்கும்
இறந்துவிட்டால் போதுமையா இனியெதற்கு இந்தவாழ்வு?
என்றழுத ஏதி லிக்கும்
ஆசையெனும் மைதொட்டு இளமையேட்டில் எழுதிவந்த
இளையோர்க்கும் வாழ்வு தந்து
பிறந்துவிட்டால் கனிமரம்போல் பிறர்மகிழக் கொடுக்கவேண்டும்
பயனுள்ள இதுதான் தொண்டு!
பூமியிலே அருளொளியைப் பொழிகின்ற மரகதமே!
சப்பாணி கொட்டி யருளே! 35



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

காற்றுக்கு ஆடியாடி உதிரு கின்ற
காய்ந்துபோன உதிரிகள்போல் வாழ்வைக் கழித்து
சோற்றுக்கே மாடாகி உழைத்து நோயால்
சாகின்ற மனிதரினச் சரித்தி ரத்தில்
நூற்றுக்குள் ஒருத்தியாக நீதி கற்பு
நெறிநின்ற மருதமடுச் செல்வி! நேய
நாற்றுக்கள் மனப்புலத்தில் நட்டு வைத்த
நாயகியே! சப்பாணி கொட்டு அம்மா! 36

நஞ்சொத்த மனத்தாலே நல்லோர் போல
நடித்துலகை ஏமாற்றி வாழ்வோர் முன்னே
வெஞ்சொற்கள் பலவற்றை வாள்போல் வீசி
வதைத்தாலும் முறுவலுடன் சலியா தேற்று
நெஞ்சுக்குள் பகைவென்று நேயம் வளர்த்து
நிலவுலகில் தாழாது ஒளியைத் தந்த
செஞ்சுடரே! செவ்வாழைக் கால்கள் மடித்துச்
சிறுகைநீட்டிச் சப்பாணி கொட்டு தாயே! 37

ஏறுகின்ற நிலவாக உதித்தாய்! வண்ண
இதழ்விரித்து மணமலராய்ச் சிரித்தாய்! யாவும்
மாறுகின்ற வையகத்தில் மாறா திருக்கும்
மனிதநேயச் செடிநட்டு நீரை வார்த்தாய்!
கூறுகின்ற ஞானமுன்னில் நதிபோல் பொங்கிக்
குவலயத்தில் பாயுதம்மா! கவிஞர் நாவில்
ஊறுகின்ற தமிழெடுத்து வாழ்த்து கின்றோம்!
இன்னமுதே! சப்பாணி கொட்டு தாயே! 38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவாக்கைச் சொல்லுகின்ற ஞானி கூட்டம்
இங்குவழி காட்டியதன் பின்னும் அழியாக்
கறைபடிந்த மானிடத்தின் களங்கம் துடைக்கக்
கல்வாரி மலைக்குருதி போதும்! பாவச்
சிறையுடைத்து விலங்ககற்றி எழுந்து நீயும்
சத்தியத்தின் வாசலுக்கு ஓடு என்ற
மறைநீதி சொன்னவனைச் சுமந்த முத்தே!
மடுமகளே! சப்பாணி கொட்டு தாயே! 39

தூய்மைக்கு அல்லிமலர் வண்ணம் போலத்
துலங்குகின்ற தாவீது வம்ச விளக்கே!
வாய்மைக்கு ஊற்றான வல்ல தேவன்
வரப்பொருளாய் வழியொளியாய் நின்ற தெய்வம்
பாய்விரித்து அவதரித்த உதரச் சிமிழே!
பூமியிலே பாசவூற்றாய் ஓடிப் பொங்கும்
தாய்மைக்கோர் உரைகல்லே! மடுவில் ஆடித்
தழுவவரும் இளமயிலே! சப்பாணி கொட்டு! 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. முத்தப் பருவம்

விண்ணிலே அழகுகாட்டி வளர்ந்துவரும் பிறைநிலவு போல் மண்ணிலே தளர்நடை போட்டுவரும் குழந்தையிடம் தாயும், பெண்களும், ஏனையோரும் "கண்ணே! தேனே! கட்டாணி முத்தே! அமுதே! கரும்பு முத்தமொன்று எனக்குத்தா" என்று இரந்து கேட்கும் இம்முத்தப் பருவம் பதினோராந் திங்களில் நடந்தேறும் நிகழ்வாகும்.

தழைத்த அன்பும் தாழாத
        தியாகக் குணமும் சலசலத்துத்
    தத்தி ஓடும் அருவிபோலத்
        தவழ்ந்த யூத நாட்டினிலே
அழைத்த பசுவின் குரல்கேட்டு
        அங்கு கன்றும் ஓடிவரும்
    அமுதப் பாலை மடிமுட்டி
        அருந்தும் முத்தை நாராக்கி
இழைத்து மின்னும் பவளத்தை
        ஊன்றிப் பதித்த ஆபரணம்
    ஒளியை வீசிக் கண்பறிக்கும்!
        உதடு சுவைக்கும் சாறையூற்றிக்
குழைத்த இனிய நறும்பாகைக்
        கொட்டி மண்ணில் சிந்துவாரார்?
    கொம்புத் தேனாய் இனிப்பவளே!
        குலவி முத்தம் தருகவே! 41

படிக்கும் அமுதக் கவிதையாகப்
        பூத்துச் சிரிக்கும் முல்லையாகப்
    பின்னிக் கிடக்கும் மீனாகப்
        பூங்கா தவழுங் காற்றாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியில் தொங்கும் கனியாகக்
கோடை தாங்கும் நிழலாகக்
கரும்பைப் பிழிந்த சாறாகக்
கருணை தந்த திருமகளே!
வடிக்கும் கண்ணீர் காயாமல்
வாழும் எளிய பிறவிகளின்
வலிய இதயக் கதவுகளை
வீடு தட்டித் திறந்தவளே!
துடிக்கும் நெஞ்சம் பேராசைத்
துயரில் மூழ்கும் வேளையிலே
துணையாய் இறைவன் தந்தமுத்தே!
தளிர்வாய் முத்தம் தருகவே! 42

பாவம் என்னும் சேற்றிடையில்
பண்பு கெட்ட மாந்தருள்ளே
பூமி மீட்பின் ஒளிகாணப்
பிறந்தார் யேசு பெத்தலேமில்
காவல் இல்லா விளைநிலத்தைக்
காட்டு விலங்கு வேட்டையாடும்
கானல் தனையே நீரென்று
கருதும் மானும் தோற்றுவிடும்
ஆவல் மீறும் ஆசையெலாம்
அழிவை ஒருநாள் சந்திக்கும்
அன்பு என்ற ஆயுதந்தான்
அனைத்து உலகை வெற்றிகொள்ளும்
தேவன் மகனைச் சுமந்தவளே!
தேனின் முத்தம் தருவாயே!
தந்தக் கையால் இதழ்தொட்டுத்
தழுவி முத்தம் தருகவே! 43



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னல் நடையில் ஆறோடிப்
புரண்டு கடலில் சங்கமிக்கும்
பனியும் முத்தைப் போல்மலரில்
படுத்து ஒட்டி உறவாடும்
கன்னல் உண்ட எருதுகளோ
கனியும் பாலைப் பொழிந்துநிற்கும்
கரிய மஞ்சும் மருதுகொஞ்சிக்
கட்டித் தழுவும் மடுப்பதியில்
மின்னல் கிழித்து ஒளிக்கீற்றாய்
மின்னி வானில் பாய்வதுபோல்
முதலில் ஏவாள் செய்தகுற்றம்
மக்கள் முதுகில் சுமையான
இன்னல் தனையே எடுத்தெறிய
இறைவன் மைந்தன் யேசுவையே
அகிலம் மீள அளித்தவளே!
ஆசை முத்தம் தருகவே! 44

சலங்கை ஒலிபோல் புள்ளினங்கள்
சத்தம் போடச் சங்கீதச்
சுகத்தை ஓடை சலசலக்கச்
சோலை விரித்த மடுப்பதிக்குக்
கலங்கி வந்த அடியவர்கள்
கவலை எல்லாம் கதிரவனைக்
கண்ட பனிபோல் கரைந்தோடும்
கயவர் செய்த கொடியபவ
விலங்கை உடைக்க வான்வீட்டை
விட்டு ஈனர் வாழுலகு
வந்த தேவன் தனைத்தூதர்
வாழ்த்தும் பாடல் மோகனமே!
துலங்கும் வண்ண முகநிலவு
தூக்கி முத்த மழைபொழிவாய்!
தமிழின் சொல்லே சிலம்பமாடத்
தென்றல் முத்தம் தருகவே! 45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

பேயாலே ஏவாளும் புத்தி கெட்டுப்
புரிந்திட்ட பாவத்தின் களையை வெட்ட
ஓயாமல் முன்னுரைத்த வேத வாக்கு
ஓரெழுத்தும் பிசகாமல் நிறைவு காணச்
சேயாக யேசுவினைத் தந்த தாலே
சேவடியை மக்களெலாம் வாழ்த்திப் பாடும்
தாயான மரியாளே! தியாக நிலவே!
தணியாமல் விளையுமன்பு முத்தம் தாவேன்! 46

விண்ணோடு சங்கமித்து முழங்கு கின்ற
வெற்றியெனும் சங்கநாதம் கேட்ட தன்று!
மண்ணாலே கலைஞனவன் படைத்து விட்ட
மன்னுயிர்க்காய்த் தன்னுயிரைத் தந்தோன் பிறப்பைக்
கண்ணாலே விழுங்கிநின்ற ஆயர் ஞானி
கூட்டமெலாம் மெய்சிலிர்க்க அந்த நாளில்
பெண்ணாலே பறிகொடுத்த வாழ்வை மீண்டும்
பரிமளிக்கச் செய்தவளே! முத்தம் தருக! 47

உள்ளங்கை நெல்லியைப்போல் உண்மை வெளிக்கும்
ஒருநாளும் பொய்மைவாழ்வ தில்லைப் பாவ
முள்ளொன்று குத்தநெஞ்சில் குருதி கொட்டும்
மாறாத வடுவதனால் பதியு மன்றோ!
பிள்ளைமனம் கொள்வதோடு புவியில் ஐந்து
புலனடக்கி நமையொடுக்கி வாழ யேசு
வள்ளலினைப் பவவிலையாய்த் தந்த பொன்னே!
வாயிதழின் அமுதுகொட்ட முத்தம் தாவேன்! 48



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிக்கின்ற கண்ணீரில் கரைந்து விம்மி
வாழ்வென்னும் சுழியினிலே வீழ்ந்து சிக்கி
அடிக்கின்ற புயலாகக் குதறிக் கொத்தும்
அவலங்கள் கருக்கட்டிப் பெய்யக் காற்றில்
நடிக்கின்ற பசுங்கதிர்கள் வயலில் கூடி
நடனமாடும் மருதமடுப் பதிக்கு வந்த
துடிக்கின்ற நெஞ்சுதேற்ற முத்தம் தருக!
திருமகளே! சந்தனப்பூ முத்தம் தருக! 49

பழிப்பற்ற செந்நெறியில் பிறரன் போடு
பேசுகின்ற மனிதநேயம் பேணிப் பாவ
இழிவகற்றி வாழ்ந்துவிட்டால் இன்ப மன்றோ!
இந்தநெடும் பச்சைமணி மேய்ச்சல் புலத்தில்
செழிப்புடனே அருள்பகிர்ந்தால் போதும்! அன்பு
செப்பலோசை ஊறிவரும் வெண்பா போலக்
கொழிக்கின்ற பேருள்ளம் கொண்ட மரியே!
குலவிவந்து இனியமுத்தம் ஒன்று தருக! 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. வருகைப் பருவம்

"செல்வமே வா! சாகாத புகழ்கொண்ட எங்கள் குலத்தின் விடிவிளக்கே வா!" என்று தளர்நடை போட்டு நெஞ்சை யள்ளிவரும் மழலை மொழிப் பிஞ்சைப் பெற்றோரும், அன்புமிக்க மற்றோரும் வாஞ்சையுடன் கைநீட்டி அழைக்குமிந்த வருகைப் பருவம் பதின்மூன்றாம் திங்களில் நடந்தேறும் நிகழ்வாகும்.

உச்சியிலே சத்தியத்தின் அடிமுடியாய் வடிவுகொண்டு
ஒன்றிருக்க மறந்து வாழ்வில்
அநீதிக்கே கவரிவீசிச் சூதென்ற தொட்டிலாடி
அகம்பாவம் கொண்டு நிமிர்ந்து
பச்சையாகப் பொய்பேசிப் பாரதிர அக்கிரமம்
புரிந்துவாழும் கொடிய மனிதா!
பாவமொச்சைச் சேறகற்றப் புண்ணியத்தேன் நதிகுளித்து
புதுப்பிறவி எடுப்பாய் நீயே!
நச்சுவிழி காட்டிவரும் நரிக்குமிங்கே வளைபடைத்த
நல்லதேவன் அன்பைத் தானே
நினைந்தழுது நெஞ்சுருகி மனத்தரையைப் பண்படுத்தி
நாளுமவர் பாதந் தொழுது
இச்சைவழி நடவாது முப்பொழுதும் எப்பொழுதும்
இறைவனுக்கே கோயி லாகி
எண்ணிலாத ஒளிவதன வெண்ணிலாவாய்ச் சுடர்பவளே!
இளங்கொடியே! எழுந்து வருக! 51

தேடரிய சொத்துசுகம் தொலைந்துபோகும் காலமோடித்
தளையவிழ்ந்து புதிய முகைகள்
தாரணியில் உருவாகி மடிந்துபோகும் நதியும்பூ
தினகரனும் மலையும் நிலவும்
நாடறிந்த பெரும்புகழும் உயிரடங்கிப் போயழியும்
நானென்ற அகந்தை நலிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரில்லாப் பயிராக வாடிமுகங் கருகிவிடும்
நிலவுலகில் நிலைத்து வாழக்
காடதிரும் வாழ்த்தொலிகள் கேட்குமிந்த வன்னிமண்ணில்
காத்திருந்த எளியோர் தங்கள்
கவலைதீர்க்கப் பூவிழியால் கருணைமழை பொழியுமிளங்
கோமகளே! உன்னைப் போற்றிப்
பாடவொரு ஏடெடுத்தேன் பன்னீராய்ச் சொற்துளிகள்
பூமாரி கொட்ட வருக!
புல்லரித்து உடல்சிலிர்க்கப் பொன்கொழிக்கும் மடுவினிலே
பூமணம்போல் குலவி வருக! 52

சீர்கெட்டு நசிகின்ற சமூகக்கட் டாந்தரையைச்
செப்பனிட்டு உழுது புரட்டி
செங்கதிரோன் ஒளிதடவச் சாய்ந்தாடும் கதிர்விளையச்
செய்தவர்கள் வாழ்ந்து முடிந்த
ஊர்கெட்டு உண்மைநீதி மூச்சுவாங்கித் தலைதெறிக்க
ஓடியொளித்த பொழுது துணிந்து
உதட்டினிலே சிரிப்புடனும் உள்ளத்தில் நெருப்புடனும்
உலவுகின்ற ஓநாய் நடுவே
மார்தட்டிப் பாவமெனும் அரக்கனுடன் போராடி
மாசற்ற புனித நெஞ்சை
மாபரனும் தத்தெடுத்துக் குடிபுகுந்த குலத்தினிலே
முட்களுடே ரோசாப் பூப்போல்
பாரெட்டுத் திசைகளிலும் தாய்த்தமிழின் மணஞ்சிந்தும்
புனிதமடுப் பதியில் உலவும்
பேரழகே! கன்னியெனும் வனத்திலென்றும் தவழ்கின்ற
பூங்காற்றே! பொலிந்து வருக! 53

சிட்டொன்று மாந்தோப்பில் சிறகடித்துத் தனைமறந்து
சங்கீதக், குரலை மீட்ட
சிந்தையிலே ஆனந்த அருவிசிந்த ஏதெனென்ற
சிங்கார வனத்தில் முல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொட்டொன்று ஆதாமின் துணையாகி இருந்தநாளில்
முழுமுதல்வன் விதித்த சட்டம்
மீறிவிட்ட நெடுங்கவலை ஊளையிடச் சிறைப்பட்டோர்
மீளவழி சமைத்தாள் ஒருத்தி!
பட்டுமேனி! கண்மேடை ஆடிவரும் முத்துரதம்!
பாடலுக்கு வாய்த்த தொடைதான்!
பூமியிலே மாலைவேளை கேட்டிருக்கும் வசந்தராகம்!
பால்சொட்டும் மழலை அமுதம்!
சுட்டபொன்போல் எத்திக்கும் கிளையெறிந்து விழுதுவிட்டு
சுடர்வீசுங் கன்னி வருக!
சுந்தரப்பூங் கவிதுளும்ப முந்திரிகைச் சாறுபோலச்
சுவைப்பவளே! இனிதே வருக! 54

கண்கட்டி வித்தையாலே மணலைத்தான் திரித்துருட்டிக்
கயிறாக்கி வாழ்வார் முன்னே
கைகட்டி வாய்மூடி நல்லவர்கள் இடறிவிழக்
குழிவெட்டும் வஞ்ச உலகில்
மண்பட்டு அழிகின்ற மாயவுடற் கோலத்தில்
மோகந்தான் கொண்டு விளக்கு
முனையினிலே பறந்துமுட்டும் விட்டில்போல் விழுந்தீற்றில்
மயங்குவதைக் கண்ட பின்னும்
பண்பட்ட உள்ளங்கள் பாவத்தால் புண்பட்டுப்
போகாத திசையில் செல்லப்
புனிதமான இறையன்பு சோதிமுகச் சுடர்நிலாப்போல்
பொலிகின்ற ஒளியை வீச
விண்தொட்ட தூதரடிப் பூவைவண்டாய் மிகமொய்த்து
வணங்குகின்ற விமலித் தாயே!
வளந்திகழும் மடுக்கொம்பில் திரட்டிவைத்த செந்தேனே!
விண்ணழகே! விரைந்து வருக! 55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

தண்ணீர் காணாது வாடும் பயிர்போலத்
தவித்துமே நோயால் மடிந்து
மண்ணே தின்றழிக்கு மிந்தப் பொய்யுடலை
மகிமையால் மெழுகி ஈற்றில்
கண்ணீர்த் துளிசிந்தும் கதையில் சுகந்தானும்
கடுகள வேனும் இல்லை!
விண்ணின் ஆளரசை வயிற்றில் தாங்கியவோர்
வளஞ்செறி கதிரே! வருக. 56

விந்தை சூழுலகில் வாசப் பூமணமாய்
வீசியே அன்பில் நனைந்து
தந்தை குமாரனுடன் தூய ஆவியையும்
தொழுதுமே வணங்கிச் சேரும்
நிந்தை தன்னைநிலாச் சோறாய் ஏற்றினிய
நிழலுமாய் மடுவில் வாழும்
சிந்தை தனைத்தெருட்டும் மோனைக் கவியழகுச்
சந்தமே! கரும்பே! வருக. 57

வேட்டை யாடிமானைக் காட்டு விலங்குதின்று
வாழுமிந்த உலகில் பாசக்
கூட்டைப் பிரிந்ததொரு குஞ்சுப் பறவைபோலக்
கலங்கினோம்! பள்ள நீரும்
மேட்டை நோக்கியோடி வராது ஒருபொழுதும்!
மனிதனும் திருந்தி வான
வீட்டைச் சென்றுகாணத் தரும வழிகாட்டும்
விண்ணக நிலவே! வருக. 58



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரும் இழந்துமங்காப் புகழும் செத்துலகில்
பின்புமேன் இந்த வாழ்க்கை?
ஊரும் மெச்சவாழ்வு முடியும் அன்புசெய்த
உறவுதான் எஞ்சி நிற்கும்
தேரும் ஊர்ந்துவரும் மன்னன் தாவீதின்
திருமகள் வருக! பூவும்
நாரும் தொடுத்தசெழும் மாலை கழுத்தணிந்த
நிலாவொளிக் கலையே! வருக. 59

மூத்து வளர்ந்தபுகழ் மலையின் முடிதடவும்
மோகனம் பேச்சில் கொட்டும்
பூத்து விரிந்தமலர் முகத்தின் அழகுசொல்லும்
புன்னகை இதழில் கொஞ்சும்
கூத்து ஆடுமயில் நடையில் துள்ளிவரக்
கருணைபொறை தாழ்ச்சி கட்டோடு
காத்து வளர்த்திட்ட கானக் குயிற்பேடே!
கன்னிமைப் பூவே! வருக. 60



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. அம்புலிப் பருவம்

நீலவானம் விரித்த தாரகைத் தோட்டத்தில் பவனிவரும் விண்மணியாம் தங்க நிலவைத் தங்கள் கண்மணியாம் குழந்தையுடன் விளையாட வருமாறு பெற்றோரும், சூழ்ந்திருக்கும் மற்றோரும் அழைக்குமிந்த அம்புலிப் பருவம் பதினைந்தாம் திங்களில் நடந்தேறும் நிகழ்வாகும்.

தேனை ஊற்றும் விழிப்பார்வை
தெரிந்தால் அதுதான் முத்திநிலை!
தாழாக் கருணை முகங்கண்டால்
துன்பம் விலகி ஓடிவிடும்
சேனை நிகர்த்த தூதர்கள்
செடியில் மலராய்ப் பூத்திருந்து
சுகந்தம் தெளிக்கும் சேவடியைச்
சூழ்ந்து வாழ்த்தக் கவிதையிலே
மோனைப் பொருளாய் அள்ளுண்டு
மழலை வடிவாய்ச் சிரிப்பவளே!
முத்து நகையை விரித்திட்டால்
மண்ணில் அமுதம் பருகிடலாம்
வானை உரசிப் பவனிவரும்
வட்ட நிலவே! தேயாது
வளரும் அன்புச் செல்வியொடு
வண்ணாங் கொழிக்க ஆடவாவேன்! 61

கூடும் முகில்கள் தேடிவந்து
கொட்டும் மழையில் செழித்தபூமி!
கொள்ளை அழகைத் தங்கவயல்
கொடுக்கும் மடுவின் எழிற்கோலம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடும் பறவைக் கூட்டங்கள்!
பழங்கள் சிலிர்த்த தோட்டங்கள்!
பார்க்கும் விழிக்கோர் தேட்டங்கள்!
பருவம் கொஞ்ச வண்ணமயில்
ஆடும் நடனம் கண்விருந்து!
உறங்கும் வண்டைத் துயிலெழுப்ப
ஒருபூ விரிந்து தூதனுப்பும்
ஊர்ந்து காற்றில் அலைந்து நாளுந்
தேடும் வானைத் தொட்டிழுக்கத்
தவழும் மோன அம்புலியே!
தெய்வ மணமே பொலியமுதைத்
தழுவி அணைத்து ஆடவாவேன்! 62

ஞாலம் வனைந்த தலைவனவன்
நதியை நிலவைக் கதிரவனை
நீலக் கடலை நெடுமலையை
நீண்ட வானை நறுமலரைக்
கோலப் பறவை இனத்தோடும்
கூட மண்ணில் கனல்கக்கிக்
கொடுமை நெஞ்சில் புரையோடும்
குலத்தை ஏனோ படைத்துவிட்டான்?
ஓலம் போடும் குள்ளநரி
உள்ளம் தீயாய்க் காந்துகின்ற
உலகம் தவித்த நிலைகண்டு
அன்பின் முரசு கொட்டியெழக்
காலம் தந்த மகளோடும்
குறும்பாய் மலரின் இதழ்துழாவிக்
கலையை வீசும் அம்புலியே!
குலுங்கிக் குலுங்கி ஆடவாவேன்! 63



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றி வந்தால் கதிர்ஈரம்
முழுதும் அற்றுப் போகுமன்றோ!
மேகம் குறுக்கே திரைவிரித்தால்
மோன நிலாவின் ஒளியேது?
சுற்றி நம்மை வளைத்துவிட்ட
சீறும் பாவ அரவழித்துச்
சிறிதும் அச்சங் கொள்ளாமல்
செகத்தில் நிமிர வழியுண்டு
வெற்றிப் பாதை கால்நகர்த்தி
வாழ்வு என்னும் நெருப்பாற்றில்
வீசும் அலையின் தடைகடந்தால்
வசந்தம் பூத்துக் குலுங்கிடுமே!
தொற்றி விட்ட விண்மீன்கள்
தோட்டம் உலவும் அம்புலியே!
தொடரும் உந்தன் கறைகழுவத்
தூய மரியைத் தழுவியாடேன்! 64

அன்று தூதர் தொழுதவளே!
அன்புக் கொற்றம் அமைத்தவளே!
அருளில் வார்த்த சொல்லுருவே!
உள்ளங் கவரும் மறைவனமே!
கன்று தாயை இழந்ததுபோல்
கண்ணீர் ஆற்றில் குளிக்கின்ற
கயவர் வாழ்வில் கடைத்தேறக்
கண்ணாற் பாரும் மரியம்மா!
என்று பாடி மனங்கசிந்து
உன்னைத் தேடி ஓடிவந்தோம்!
எந்த நாளும் துயர்களைந்து
இருகை நீட்டி அரவணைப்பாய்!
ஒன்று சொல்வேன் அம்புலியே!
உலகின் பலியாய்க் கல்வாரி
ஏற்ற மகனின் தாயோடு
ஓடி மகிழ்ந்து ஆடவாவேன்! 65



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

தாய்த்தமிழின் இனிமைபொங்கித் ததும்பிமிக வழிந்தோடித்
தாரணியே வியந்து பேசும்
தெய்வசுகக் கவியமுதைச் சுவைத்துமனம் மயங்குவார்போல்
தமைமறந்து இங்கு வந்து
வாய்க்கினிய சொல்லாலே முகவுரையை எழுதிவிட்டு
வருந்துயரம் தூர விலக
வாழியவே காலடிகள் சவ்வாது கமகமக்கும்
வரிசங்கின் அழகே! என்று
சாய்ந்தாடிக் குமிழ்ச்சிரிப்பால் நெற்கதிரைப் பூந்தென்றல்
சூழ்ந்துகும்மி அடிக்க மடுவில்
செங்கமல முகமலரில் சந்தனத்துப் பொட்டிலங்கச்
சிந்துபாடும் வானக் குளத்தில்
தோய்ந்தாலும் பொன்னழகு மாறாத வகிடெடுத்துத்
தலைவாரி வடிவு காட்டும்
தங்கவண்ண அம்புலியே! அலங்கார மரியுடனே
தெம்மாங்கு பாடி ஆடேன்! 66

பொங்குபுனல் மண்ணைநக்கித் தறிகெட்டுப் புரண்டோடப்
பச்சைமணி தெறித்துச் சிரிக்கும்
பெருகிவரும் தேனருவி பூத்துநிற்கும் வண்ணமலர்
புதுமணந்தான் கமழும் விளைந்த
தங்கவயற் பொன்மலைகள் தலைநிமிர்ந்து வானைமுட்டும்
தெங்கினங்கள் ஓங்கி வளரும்
தென்றலுடன் பொறிவண்டுந் தில்லானாப் பாடுகின்ற
திருமருத மடுவில் காயுஞ்
செங்கதிரோன் மல்லிகைப்பூ மேனிமூடக் கீற்றளவாய்ச்
செவ்விளந்தாள் நீயும் வணங்கச்
சுந்தரமீன் பன்னிரண்டு சுடர்வீசித் தலையிலேறிச்
சொர்ணமுத்து மகுடஞ் சூட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்குமொளி விளக்கேற்றித் துங்கவானப் பந்தரிலே
எட்டிக்கை பிடித்துத் தொங்கும்
அம்புலியே! கருணையெனும் அமுதள்ளித் தருகின்ற
அன்னையொடு ஆட வாவேன்! 67

பாவமெனுங் கறைகழுவும் புனிதஊற்றே! அருட்பிழம்பு
பிதாவினது அன்பு மகளே!
பூவிலேழு கொடைதந்து வாழ்வளிக்கும் தூயஆவி
பத்தினியே! அணையை மீறும்
ஆவலொடு உதிரமாரி சொரிந்துயிரால் புவிமீட்ட
அருளரசின் தாயே! நாடு
ஆண்டபுகழ் மன்னவர்தங் குலப்பொன்னே! மரகதமே!
ஏழைகண்ட வாழ்வே! ஆன்ம
காவலுக்கு யாருமில்லை ஆறவொரு நிழலுமில்லை
கட்டறுத்து ஓடுந் தமிழால்
காதலிசை பாடியுந்தன் கழலிணைகள் தேடுகின்ற
கோடிமக்கள் பீடை விலகத்
தேவமன்னன் யேசுவிடம் பரிந்துரைப்பாய் மாதரசே!
திரிகின்ற மேகந் தொட்டுத்
தழுவிவிளை யாடுகின்ற அம்புலியே! தவக்கொழுந்து
தன்னோடு ஆட வாவேன்! 68

முந்தானை வான்முகட்டில் மோகநிலா விளக்கெடுத்து
முகங்காட்டும் வேளை பார்த்து
மணந்தூவும் அல்லிமலர்த் தடாகத்தில் முறுவலித்து
மங்கலமுந் துள்ள நாவில்
செந்தேனாய் இனிப்பவளே! சீர்கெட்ட தழைதொடையால்
செய்தபாட்டாய்ச் சிறப்பை இழந்து
சூதரங்கில் பாவநடம் சன்னதமாய் ஆடிவிட்ட
சதிகாரன் நானும் எழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தேனுன் சந்நிதிக்கு வேதனையில் பிறக்குமன்றோ
விடிவொருநாள் என்று எண்ணி
வாடாத கவிமாலை தொடுத்துவிழி நீரோட
வருகின்றேன் உன்னைத் துதிக்க
எந்தாயே! மடுவீட்டின் அச்சடித்த சித்திரமே!
ஏழிசைதான் குயிலும் பாட
ஆகாய் ஊஞ்சலாடும் அம்புலியே! செம்பதத்து
அமலியொடு ஆட வாவேன்! 69

நம்புமெனைக் கைநெகிழ்ந்து நட்டாற்றில் நீவிட்டால்
நிம்மதிக்கு எங்கு போவேன்?
நீளுலகில் அந்தரித்து நொந்தோர்க்கு வந்துதவும்
நல்லதாயும் நீயே அன்றோ!
தெம்புதந்து எமைத்தேற்ற ஆளுமில்லை ஆற்றியொரு
துயர்துடைக்க எவரு மில்லை!
தூதுவிட்டேன் உலாப்போகும் தென்றலையும் குயிலையும்
தக்கபதில் கிடைக்க வில்லை!
கொம்பிழந்த கொடிபோல வளைந்தொடிந்து புழுதிபடக்
குப்பையிலே கிடந்தேன் புலம்பும்
கண்ணிரண்டும் கொட்டுதம்மா! பன்னீரை உன்னடியில்
கவிழ்ந்தவெள்ளிப் பாலின் குடமே!
அம்புலியே! மனமொன்று உனக்கிருந்தால் மாளாத
இடர்சொல்லி அவளைக் கண்டு
ஆனந்தச் சதங்கையொலி கொஞ்சிடவே மாறாத
இன்பமொடு ஆட வாவேன்! 70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. அம்மானைப் பருவம்

பந்துபோன்ற வண்ணக் காய்களைச் சிந்துபாடிக்கொண்டு, வானத்தை நோக்கி எறிந்து விளையாட எழுந்து வரும்படி தோழிகளும், மற்றவர்களும் குழந்தையினை அழைக்குமிந்த அம்மானைப் பருவம் பதினேழாந் திங்களில் நடந்தேறும் நிகழ்வாகும். இனிமை கொப்புளிக்கும் இந்நிகழ்வு இரண்டாம் வருடத்திலும் நடைபெறும் என்பது சிலரின் கருத்தாகும்.

சீதமுகில் விதானத்துச் சந்துகளில் மணலெடுத்துச்
சிங்கார வீடு கட்டும்
சாந்துவண்ண முகநிலவு சோதிமணி விளக்கேந்தும்
சிவந்தவெயில் மாலைப் பொழுதில்
ஆதவனும் கடல்குளித்து அந்திவானத் திரையினிலே
ஓவியங்கள் தீட்டி வைப்பான்
ஐந்திணையின் எழில்குழைத்த அழியாத வண்ணங்கள்
அரும்புகின்ற மருத மடுவில்
வேதமெனும் ஆலமரம் விசுவாசக் கிளைபரப்ப
விழுதூன்றி நின்ற செல்வி!
வாட்டுகின்ற ஏக்கங்கள் மீட்டுகின்ற முகாரிதானும்
வந்தென்றுன் செவியில் சேரும்?
ஓதக்கேள்! சிரசணிந்த உடுக்களையே பந்தாக்கி
அம்மானை ஆடேன்! சூழும்
எவ்வுலகும் போற்றிசெய்யச் செம்பஞ்சுக் காலுதைத்து
அம்மானை ஆடி யருளே! 71

அப்பமுடன் மீனைஐந்து ஆயிரம்பேர் உண்ணவைத்து
ஊர்ப்பசியைத் தீர்த்த வள்ளல்!
அலைநடந்த சத்தியனாய் என்றுமுள்ள நித்தியனாய்
அற்புதங்கள் செய்த தேவன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் கருணையெனும் மணித்தரளம் எறிந்தகடல்!
ஓங்குதூய்மை கண்ட வெண்பா!
அக்கிரம வழிநடந்த ஊதாரி தனையென்றும்
ஏற்றதிருப் பிதாவை கடலில்
தெப்பமெனக் கரைகாணாக் கலங்குவிழி நீரோடு
தவிக்கின்ற நெஞ்சைத் தேற்றித்
தீயமனுச் சந்ததிக்காய் தான்மடிந்து சரிதமான
தெய்வமகன் தாயே! வாழ்வில்
தப்பேதும் செய்யாது இப்பிறவிப் பொற்பமைந்த
திருமகளே! மரியே! மான்போல்
தத்திவந்து செங்காந்தள் மலர்க்கையால் அம்மானை
தானாட ஓடி வாவேன்! 72

நிலையான பொருளொன்றும் இல்லையென்ற நீதிசொல்லும்
நிலவுலகின் கதியே! காணும்
நிலம்வெளுக்க ஓடிவரும் நீரும்நீ! நடப்பதெலாம்
நின்னருளின் பாடல் அம்மா!
இலையுதிரும் காலத்தில் கனிகளுக்கு ஏங்கியழும்
உலகினுக்கே துணையாய் நின்றாய்!
அந்திபகல் வந்துபோகும் பொன்னிலவும் சூரியனும்
உன்னீர நெஞ்சத் தோற்றம்!
மலையாமல் பிறர்குற்றம் மன்னிக்கும் பேருள்ளம்
மண்ணகத்தில் பெற்று நீயும்
மங்காத தாழ்ச்சியிலே துருவமீனாய்த் தான்துலங்கி
மாதருக்குள் திலகம் ஆனாய்!
தலையான பொற்புகுன்றாத் தீபமாகித் தடம்புரளாத்
திசைகாட்டுந் தேவி! நீலத்
தொடுவானில் நித்திலப்பூ விழித்திருக்க அம்மானை
தாளமொடு ஆட வாவேன்! 73



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனிருக்கும் மலர்போன்ற மெல்லுடலை மீட்டியிளந்
தென்றல்தான் சிந்து பாடத்
தாரணிதான் நீருண்ட முகில்கண்ட மயில்போலத்
தோகைதனை விரித்து ஆடும்
மீனிருக்கும் நெடுவானம் மாதரசே! நிர்மலத்து
முகங்காட்டும்! மகிழ்வில் திளைத்த
மானொன்று நீரோடை கண்டுதுள்ளிச் செல்கையிலே
மலைப்பாம்பின் பிடியில் சிக்கித்
தானிருக்கும் நிலைகண்டு துவள்வதுபோல் மனக்கடலில்
துயரலைகள் மோது தம்மா!
தஞ்சமொன்று நீவந்து தராவிட்டால் வாழ்வுதானும்
தழைத்திடுமோ? இன்பம் சூழ்ந்த
வானிருக்கும் சந்தானாள் தந்ததூண்டா மணிவிளக்கே!
வழியெதுகை மின்னும் கவியே!
வெண்தந்தப் பூங்கரத்தில் வளையொலிக்க அம்மானை
விளையாட்டு ஆட வாவேன்! 74

சூதாக ஓரலகை கொடுப்புக்குள் சிரித்ததனால்
சீரழிந்த மனித வாழ்வு
செழிக்கயேசு தன்னுயிரைக் கல்வாரி மலைமுகட்டில்
சீவபலி தந்தார்! நாமோர்
வேதாளம் முருங்கையிலே மறுபடியும் ஏறினாற்போல்
வஞ்சம்பொய் சூழ்ச்சி செய்து
வல்லதேவன் திருமறையில் வகுத்தநெறி தனைத்துறந்து
வாழ்வினையே நரக மாக்கி
ஊதாரி போலுலகில் ஊர்பழிக்க வாழ்ந்துவிட்டோம்!
என்றைக்கும் வற்றி யறியா
உண்மைத்தேன் சொரிபவளே! ஒளிவெள்ள இரத்தினமே!
இனியசந்த வீணை ஏந்திக்
கேதார கௌளையைத்தான் விரல்மீட்டக் கலைஞானக்
கீதமழை பொழிய வஞ்சிக்
கொம்புபோல மின்னுகின்ற காலெடுத்து அம்மானை
குலவிடவே ஆட வாவேன்! 75



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

காலையிளஞ் சூரியனே! கரும்பே! முதிர்ந்ததேனே!
கருணையகஞ் சூல்கொண்ட மேகக் கொடையாளே!
சோலையிலே மலர்விரியச் சுகந்தம் எழப்பலாவின்
சுளையிலூறும் கனிச்சாறே! சர்க்கரைத் தேன்பாகே!
வேலையலை மீதுருளும் வண்ண ஒளிமுத்தே!
வேதஇறை வாக்கினரின் வாயில் அமர்ந்தவளே!
மாலைசெக்கர் வானத்தில் மதிபோல் சுடர்பவளே!
மாசில்லாப் பேரழகே! ஆடு அம்மானை! 76

உறைவழங்கும் மடுப்பதியில் அமுதத் தமிழ்குலுங்க
ஊஞ்சலாடி மகிழ்பவளே! அணிகள் மலிந்துபெய்த
துறைவழங்கும் சந்தப்பாத் தொடையாய்க் கனிந்தவளே!
தூய்மைக்கு உவமைசொல்லித் துலங்கும் வெண்பாவே!
நறைவழங்கும் லில்லியாக நாளும் மணப்பவளே!
நல்லகலிப் பாவைப்போல் நெஞ்சில் துடிப்பவளே!
இறைவழங்கும் கருணையினால் இனிமைப் பூச்சொரிய
அழகுமிழும் சிந்துடன்நீ ஆடு அம்மானை! 77

பங்கயத்தாள் விழுந்திறைஞ்சிப் பணியும் எளியோரின்
புன்மையிருள் விலகவந்த புனித நாயகியே!
துங்கமுறு வளனாரின் துணையே! விண்ணவர்கை
தொழுபவளே! பவக்கறைசூழ் உலகில் புடம்போட்ட
தங்கமென மின்னுகின்ற தாயே! அடைக்கலந்தான்
தருகின்ற படைக்கலமே! தமிழின் கவிதோற்கும்
சங்குவண்ணக் கழுத்தழகு சொல்லும் மணிமாலை
சதிராடத் துள்ளிநீயும் ஆடு அம்மானை! 78



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவுலகும் போற்றுமுழு முதல்வன் யேசுவையே
மடியிருத்தி அமுதளித்த மன்னர் குலமகளே!
தேவுலகும் காணாவுன் திருத்தாள் பெருமைகூறத்
தமிழுக்கே பஞ்சமம்மா! தேயாக் கற்பனையில்
நாவுலகு சொல்லாத நளினக் கவிமலரே!
நாதவடி வானவளே! நன்றி மறந்துவாழும்
பூவுலகும் உன்னருளால் புனிதம் பெற்றுய்யப்
பளிங்குவண்ணக் காலெடுத்து ஆடு அம்மானை! 79

தைத்தவிழி காட்டுகின்ற தீய வழிசெல்லும்
தாரணியில் முற்றிலுமே தேவன் ஆணையென்று
வைத்தகுறி தவறாது தியாகக் கோபுரமாய்
வரப்பேறு பெற்றவளே! வருந்தி அழுவோர்க்குன்
கைத்தலமே மஞ்சம்போல் காணச் செய்பவளே!
கட்டாணி முத்தழகே! கவிஞர் பாடாத
மைத்தடங்கண் பார்வையினால் எம்மை நோக்கியிள
மாந்தளிர்க்கால் பின்னிவைத்து ஆடு அம்மானை! 80



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௯. நீராடற் பருவம்

தேடக்கிடைக்காத சுகத்தைத் திரட்டித்தரும் தென்றல் இசையோடு வீசிப்பாட, வெள்ளியலைமீது இளமீன்கள் துள்ளிவிளையாடப் பாய்ந்துவரும் ஆற்றுவெள்ளத்தில், பொய்கையில் இன்பம் ஊற்றெடுக்க நீராட வரும்படி குழந்தையைத் தோழிகளும், மற்றவர்களும் அழைக்குமிந்த நீராடற் பருவம் பத்தொன்பதாம் திங்களில் நடந்தேறும் நிகழ்வாகும். மெய்மறக்கச் செய்யும் இந்நிகழ்வு மூன்றாம் வருடத்திலும் நடைபெறும் என்பது சிலரின் கருத்தாகும்.

அந்தர வானோர் உளமுருகிப் போற்ற
அகிலம் புகழ்பாட
அன்றொரு கொடிய தீயலகை நடுங்க
அபயங் கொடுத்தவளே!
சந்திரப் பிறைதான் சுமந்ததிருப் பாதச்
சரணம் தருவாயோ!
சஞ்சலக் கடலில் நெஞ்சுமூழ்கிக் கிடந்து
சாகும் வேளைமணி
மந்திர மாலை ஓதவருள் பொழிந்து
மடுவில் வாழ்பவளே!
மனமொடு உடலும் அர்ச்சிக்க உந்தன்
மடியில் இடந்தருவாய்!
சுந்தர முகத்தின் சுடர்விழிகள் கருணை
சொல்லி அலைபாயச்
சந்தன வாடை சிந்துமஞ்சள் குளிக்கச்
சூழ்ந்து ஆடுநீரே! 81

சூடிய பூவும் சகதிக்குள் வீழ்ந்து
சிதைந்து போனதுபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவைதரும் இலவு என்றுகாத்த கிளியாய்ச்
சுகமே கெட்டிழந்து
தேடிய வாழ்வில் திருப்புமுனை காணத்
தவமும் இருந்துவந்தோம்!
தாயென உந்தன் தாமரைப்பூம் பாதம்
தலையில் தூக்கிவைத்தோம்!
வாடிய பயிர்க்கு வான்மழைபோற் சொரியும்
வண்ண மடுத்தலைவி!
விழியினிற் புரளும் ஆனந்த வெள்ளம்
விடியல் வெளுப்பெறிய
ஆடிய நீரும் உருண்டுபொங்கும் புனலின்
அலையில் தேன்மணக்க
அழகுடன் பாடல் இதழ்விரித்து வரவும்
ஆடு நன்னீரே! 82

உன்னையே கதியாய் எண்ணியிந்தச் சூழலும்
உலகம் நினைந்திருக்க
ஒன்பது வாசல் கொண்டவுடல் துடிக்கும்
ஓலங் கேட்காதோ!
பொன்னையே வைத்துக் காணிக்கை செய்யப்
போன சேவடிக்குப்
பூக்களை ஏந்திப் பீடத்தில் கொட்டிப்
புவியோர் மகிழ்வரன்றோ!
தன்னையே முழுதாய்த் தாரணியின் பாவந்
துடைக்க வன்சிலுவை
தோளினில் சுமந்த செம்மறியைப் பெற்றுத்
தந்த மடுவாழும்
அன்னையே! ஏழு சுரங்களையே பிழிந்த
இசையின் அமுதுபொங்க
இளந்திரை ஆற்றில் நீரையள்ளித் தெளித்து
ஆடு ஆடம்மா! 83



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரும்பினை மொய்க்கும் கட்டெறும்பு போலக்
கமல மலரடியில்
கவலைகள் தீர்த்துக் கரையேற்றி வைக்கக்
கைகள் தொழநின்றோம்!
துரும்பென அவலக் கடலிடையே மோதித்
திக்குத் தெரியாமல்
தடுமாறி நாமும் துடிக்கத்தான் உந்தன்
திருமுன் வந்தோமா?
விரும்பிய அருளைக் கேட்டுநின்றுன் காலில்
வீழும் அன்பருக்கே
வளம்பல காட்டி வசந்தகாலப் பூப்போல்
வாழ்வைத் தருபவளே!
அரும்பிய முகைகள் தளையவிழ்த்து மலரும்
அழகு மடுப்பதியில்
அமுதலை சுரக்கும் பைம்புனலில் மூழ்கி
ஆடு நீராடு! 84

காதினில் பாய்ந்த இடியோசை கேட்டுக்
குலையும் நாகமெனக்
கலங்கியே நெஞ்சப் புண்மீது ஈட்டி
குத்திக் கிழித்தபோதில்
ஓதிடும் தூய செபமாலை தானே
உய்ய வழிகாட்டும்!
இருளிலே விழாது ஏற்றிவிட்ட பின்னும்
அணையாத் தீபமது!
மாதுளம் உருகும் மெழுகென்பார் சான்றோர்!
மூத்தோர் சொல்லிதையே
மனமெனும் அழியாப் பதிவேட்டில் எழுதி
மார்க்கம் வாழ்வினுக்கு
ஏதென மீள நினைந்தபோது அங்கே
அருளைப் பொழிந்தம்மா
உனது முகமே! தாழம்பூ மணக்க
ஆடு நீராடேன்! 85



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

காயவிழ்ந்து முற்றியொரு கனியாகும் நெஞ்சும்
கருணையன்பில் முதிர்ந்தாலே அருள்பூத்துக் கொஞ்சும்
நோயவிழ்ந்து மனிதனொரு நொடிக்குள்ளே செத்தால்
நாற்றமடிக் கின்றவுடல் தந்தலாபம் என்ன?
வாயவிழ்ந்து சொன்னதேவன் அமுதவாக்கை நம்பி
வாழ்வினிலே தூயபணி செய்தஅன்னாள் என்னுந்
தாயவிழ்ந்து ஞாயிறுபோல் மடுவானில் உதித்தவளே!
தங்கமெனப் பொங்குவண்ண நீரெறிந்து ஆடு! 86

உப்பிட்ட பேரைமண்ணும் உள்ளவரை நினைவில்
இருத்துவரே! மாறாக விலங்கினத்தார் வாழும்
இப்புவியில் நன்றிக்கே மகுடமேது? எண்ணம்
ஈடேற நெருப்பாற்றைக் கடக்கநமக் கருளிச்
சப்பாத்திக் காட்டுலகில் சமாதானங் கிளைத்த
சந்தனத்துப் பெருமரமாய் நின்றவளே! தேனைத்
துப்புகின்ற மலர்நுழைந்து வண்டாடும் மடுவின்
தடாகத்துச் செண்டாகத் துவண்டுநீரே ஆடு! 87

விம்மியழு கின்றோரின் விழிக்குளத்து நீரை
வாரிவீசித் துடைப்பவளும் வையகத்தில் நீயே!
இம்மியள வாகிலுமுன் மனத்தூய்மை வண்ணம்
என்றென்றும் வாடாத பூவம்மா! தியாகச்
செம்மலவர் தாயெனவே போற்றியுன்னை விண்ணும்
சிரந்தாழ்த்தி வணங்குதம்மா! சோலைமடு மண்ணில்
கும்மியடி என்றுதுள்ளும் வெள்ளலைகள் பொங்கக்
கலீரெனவுன் காற்சதங்கை குலுங்கிடநீர் ஆடு! 88



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதுயர் அத்தனையும் போதுமினி என்று
பாவமெனுஞ் சிலந்திவலை ஒருபூச்சி சிக்கி
விட்டதெனக் கண்டுதீயால் மொட்டோடு கருகி
வாடியபூப் போல்மனிதம் வனப்பிழந்த வேளை
கொட்டுபனி மழையாகிக் குளிர்ந்தடிக்கச் சுற்றும்
குவலயஞ்சூழ் வானத்தில் புதுமீனுந் தோன்ற
நட்டநடு நிசியினிலே நாயகனைத் தந்த
ஞானமுத்தே! நலுங்குகாற்றுப் பாடவும்நீ ஆடு! 89

கற்றவர்கள் செந்தேன்போல் கவிமலர்கள் தொடுத்துக்
காலடியில் சூட்டுகின்ற இளங்கன்னி மகளே!
உற்றதொரு நோய்தணிக்க மருந்தாகும் அமுதே!
ஓங்கிவிழும் துயர்க்கடலில் துடுப்பான துணைவி!
முற்றுமந்த அருள்வள்ளல் மறைச்சுவட்டில் ஊன்றி
மனம்பதிக்க வாழ்மனிதப் புத்திரனைச் சுமந்து
பெற்றவளே! பொலிசோலை மடுமணக்கும் மலரே!
பூந்தமிழால் நலம்பாடிப் பொங்கிடநீ ஆடு! 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. ஊசற் பருவம்

நிலவு முகத்தைக்காட்டி, கொஞ்சிக்குலவும் குறுகுறுத்த விழிகளால் போதையூட்டி, மனித உடலைப் புல்லரிக்கச் செய்யும் குழந்தையைத் தோழிகளும், மற்றவர்களும் ஊஞ்சலாடி மகிழவரும்படி அழைக்குமிந்த ஊசற்பருவம் இருபத்தியோராம் திங்களில் நடந்தேறும் நிகழ்வாகும். ஆனந்த முத்திரை பொறித்த இந்த அருமையான நிகழ்வு நான்காம் வருடத்திலும் நடைபெறும் என்பது சிலரின் கருத்தாகும்.

ஆசித்த கொடையருளும் இறைவன் தந்த
அன்புவழி நடந்து இருளில்
உதயமுகங் காட்டிமனங் கவரும் நிலவின்
ஒளியாக வாழ்ந்து சால்பால்
பூசித்த தொண்டுவிதை ஊன்றி நட்டு
பூவுலகில் நிழலைப் பரப்பிப்
புடம்போட்டால் மெருகேறும் பொன்னை வெல்லும்
பூச்சிமிழாய் நின்றாய்! உயிர்போல்
நேசித்த ஞானியொடு புனிதர் தூதர்
நெஞ்சாரத் தொழுது வாழ்த்தும்
நாயகியே! மடுவுறையும் ஞானக் கடலே!
நிந்தைதனை நாவும் சொல்லித்
தூசித்த கொடும்வாய்க்குத் தேனை வார்த்த
தியாகமலை முடியே! துள்ளித்
தந்தனத்தாம் பாட்டையிளங் காற்றுப் பாடத்
தங்கவூஞ்சல் ஆடாய் தேவி! 91

மடியறியாக் குதலைமொழி மேலே நோக்கி
மனங்கசிந்து அழுத போது
மங்காத கருணைபொங்க தாயும் அருகில்
மனங்கனிந்தே வருவாள்! சூழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடருற்ற பொழுதெல்லாம் கல்லில் மோதி
உடைந்துவிட்ட பானை போல
உருக்குலைந்து போகாமல் ஓடி வந்து
உற்றதுணை தருவாய்! உலகில்
முடிவற்ற பெருவாழ்வு கண்ட முத்தே!
மலைமடியில் தவழ்ந்து ஓடும்
மடைதிறந்த அருவியென அருளை வாரி
மெய்சிலிர்க்கத் தந்து நெஞ்சத்
திடனுற்று எழுந்துன்பூந் தாளைப் பணிந்து
தொழுகின்ற அன்பர் பட்ட
துயரமெலாம் தீர்ப்பவளே! தாந்தை தீந்தோம்
தாந்தையென ஊஞ்சல் ஆடேன்! 92

வானகத்தில் கடைவிரித்த வைரக் கற்கள்
வேய்ந்தமுடி தலையில் மின்ன
வையபிதாச் சூரியனும் உடலை மூடி
வண்ணப்பூச் சேலை கொடுக்கத்
தேனகத்தில் கொண்டமலர்ப் பாதந் தன்னைத்
தேயாத பிறையும் ஏந்தத்
தாழ்ச்சியெனுங் குன்றிலேறி நின்ற பண்பு
தாரணிக்கே புதுமை அம்மா!
ஞானகத்து ஒளிவிளக்கே! நல்ல கவிதை
நயக்கின்ற மோனைப் பொருளே!
நரம்புறுயாழ் சுருதிகண்ட இசையே! வேத
நாற்றுவிளை யாடும் புலமே!
கானகத்து மடுவிலன்று மறையோர் தொழுத
கற்பகமே! கமலம் பூத்த
காலிணையில் கிண்கிணியும் கட்டித் தழுவிக்
கலீரெனவே ஊஞ்சல் ஆடு! 93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றிலூர்ந்து மாலையுலா நடத்தும் தென்றல்
அடங்காத புயல்போல் உலகை
ஆனைதின்ற கனிச்சோலை ஆக மாற்றி
ஆட்டிவைக்கும்! வருத்தும் துயரால்
ஊற்றியழும் கண்ணீரில் நனைந்து துக்கம்
ஓயாது நசிந்து மெலிந்து
உள்ளவீடு இருண்டவேளை ஒளியை ஏற்றும்
ஒருகையைக் கண்டு வந்தோம்!
ஏற்றிவிட்ட தீபமெங்கும் பக்தி நெய்யில்
அணையாத சுவாலை வீசும்
அற்புதத்தின் நிறைகுடமே! பொற்பைச் சொல்லும்
இலக்கணமே! முத்துத் தமிழால்
போற்றியுந்தன் செஞ்சரணைப் பற்றித் தொழுது
பணிகின்றோம்! தோழி யர்கள்
பால்சுமந்து தேன்சுமந்து புடைதான் சூழப்
பொன்மகளே! ஆடு ஊஞ்சல்! 94

கவ்வியதோர் முழுமதியை ஓடி வந்து
கருமேகம் மூடிச் சூழ்ந்தால்
கடலலைகள் தாளநடம் இடுமா துள்ளி?
கலைந்துகொட்டுங் குளவி போல
எவ்வளவோ கொடுந்துன்ப ஈட்டிபாய்ந்து
இதயங்கள் குருதி சிந்த
என்னரசி! இமைக்கதவின் தாழைத் திறக்க
ஏனம்மா பாரா முகமே?
கொவ்வையிளங் கனிகொத்திக் கிளிகள் தின்னக்
கட்டித்தேன் கால்வாய் கிழிக்கக்
கானகத்துப் பேரெழிலை வானோர் காணக்
கூடிவரும் மடுவின் வண்ணச்
செவ்வந்திப் பூச்சரமே! சின்ன வளையல்
சங்கீத வீணையாக ஒலிக்கச்
சுழல்விழியும் சுந்தரப்பூ நகையுங் காட்டும்
சேடியுடன் ஊஞ்சல் ஆடேன்! 95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

மாங்குயில்கள் பூபாளம் மீட்டிப் பாடும்
மோகனஞ்சூழ் மருதமடு நறும்பூக் காட்டில்
தூங்கிவிழுந் தேனலைகள் துளியாய்ச் சொட்டத்
துயர்பிழியும் ஈனரொலி காற்றுச் சுமக்க
ஏங்கியழும் கோடிநெஞ்சம் எல்லாம் உந்தன்
அருளொழுகும் முகம்பார்த்து விழிகள் தோயப்
பூங்கவிதைத் தேரேறி விண்ணின் தூதர்
பூமாரி கொட்டநீயும் ஊஞ்சல் ஆடு! 96

கண்ணிரண்டில் அன்புவெள்ளம் கருணை வார்க்கும்
கையிரண்டும் அருள்கொட்டும் தமிழ்த்தேன் குழைத்த
பண்ணினிலே கேட்குமுந்தன் பேரே! தேடும்
பொன்முகத்தில் பூமுறுவல் எல்லா மிருந்தும்
மண்ணகத்தில் புழுவானோம் தீயில்! மாறி
மதுக்குடத்தில் வீழ்ந்தஈயாய் நாமும் மயங்க
விண்ணகம்போல் தோற்றுமின்ப மடுவுக் கரசே!
வாசமலர் சூடிப்பொன் ஊஞ்சல் ஆடு! 97

கற்தரையில் கூடநீரே கசியும் ஆனால்
கயமையிருள் சூழ்ந்தமனம் தெளிந்து வருமா?
குற்றங்கள் எரிமலைபோற் குமுறும் நெஞ்சம்
குழந்தைபோல என்றுமாறும்? கலங்கும் வேளை
பொற்பதங்கள் துணையென்றே நம்பி வந்தோர்
பொல்லாத இடர்போக்கி அணைக்குஞ் செல்வி!
அற்புதஞ்சேர் மடுவினிலே மருதை பாலை
எனுந்தூண்கள் குடைவிரிக்க ஊஞ்சல் ஆடு! 98



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலையெறிந்த கடல்நடுவில் படகாய் ஆடும்
　　அவலவேட்டை கண்டபின்னும் உந்தன் அன்பு
வலைவீழ்ந்த மான்போல வாழும் நாட்கள்
　　வாராதோ இனிமீண்டும்! மடுவின் வனப்பு
இலைவிரித்த வன்னிதேடிக் கலங்கி வந்த
　　எளியோரின் துயர்போக்க அருளை வாரி
மலைதெளித்த முத்தெனவே தந்த மகளே!
　　மனோகரச்செவ் வந்தியிலே ஊஞ்சல் ஆடு! 99

இருள்கவ்வ ஒளிவெள்ளம் எழுமே உந்தன்
　　அன்பொழுகும் முகமலரில்! அருளின் கண்கள்
கருணைநதி குளித்துநிற்கும்! கலங்கி வாடும்
　　குழந்தைக்கும் தொட்டிலுந்தன் கைதான்! நெஞ்சு
உருகவிழி நீர்பெருக வந்து மடுவின்
　　அன்னையுன்னைச் சரணடைந்தால் போதும்! வேறு
திருநாளும் இனிவேண்டாம் தங்கச் சிமிழே!
　　தாமரைப்பொன் மொட்டாக ஆடு ஊஞ்சல்! 100

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிற நூல்கள்

பாசையூரானைப் பாடு!
(கவிதை - 1992)

தூது போ தென்றலே!
(கவிதை - 2000)

வியாகுல அன்னை வெண்பா
(கவிதை - 2001)


கூவிப்பறந்த கோகிலங்கள்
(உரைநடை - 2003)

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்,
360, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 - 2378



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைஞர்களைப் பிரசவித்த யாழ்ப்பாணம், பாஷையூரில் 1938 இல் பிறந்து பல ஆண்டுகளாகத் தமிழ்ப்பணி செய்துவரும் ஆசிரியர் முடியப்பு சிங்கராயர் யாழ். மண் பெற்றெடுத்த மாபெரும் சொத்து.

எழுத்து முயற்சியாக ஆரம்பத்தில் சிறுகதை, கட்டுரை, நாடகம் என்பவற்றில் ஈடுபாடுகொண்டிருந்த இவரை 1959 ஆம் ஆண்டு "அபயம் தந்தாளும் அம்மா!" என்ற தலைப்பில், "பாதுகாவலன்" பத்திரிகையில் மடு அன்னை பேரில் வெளியான கன்னிக் கவிதையே, எதிர்காலத்தில் கவிதைத் தளத்தில் இவரைக் காலூன்ற வைத்தது.

கூர்மைபெற்ற கலை இலக்கியத்தால் தமிழுக்கும், எமது திருமறைக்கும் வளமூட்ட வேண்டுமென்பதைத் தன்னுணர்வின் குவிமுனைப்பாகக் கொண்ட இவர், 1991 இல் முன்னாள் ஆயர் அமரர் வ. தியோகுப்பிள்ளை அவர்களால் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மௌனித்த எண்ணங்கள் கிளறப்பட்டு, தீக்குளிக்கும் ஆதங்கங்களுடன் மனம் வெந்து கொண்டிருக்கும் நம்மை இவரது கவிதை வரிகள் தென்றலாக வந்து வருடிச் செல்கின்றன.

"கட்டிவைக்கும் கவிதைகளும் காட்டமுடியாப் புனிதத் தாய் மரியாள்" மீது எழுந்த இவரது, "மடு அன்னை பிள்ளைத் தமிழ்" பக்தியமுதப் பிழிவாக வாயில் விழுந்து இனிக்கின்றது.

வாழ்வியலின் அநுபவ வெளிக்கொணர்கையாக இனங்காட்டும் ஆசிரியரின் கவிதைகள் காலங்கடந்து வாழும்!

அருட்பணி அ. ஜீவேந்திரா போல்
மாகாண முதல்வர்
அமலமரித் தியாகிகள்

24-07-2004

Cover Printed: Guru Printers, 56, Adiyapatham Road, Thirunelvely.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org